தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

வெளியீடு —9—1968]
Issued—1. ,,

LIBRARY
10 OCT 1968
STATE LEGISLATURE, MADRAS
மேற்கோள் நூல்

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

REFERENCE BOOK

புதன்கிழமை, 1968 பிப்ரவரி 28
Wednesday, 28th February 1968

தொகுதி IX—எண். 1
Volume IX—No. 1

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

மேற்கோள் நூல்
REFERENCE BOOK

LIBRARY
16 JUL 1970
STATE LEGISLATURE, MADRAS

Tamil Nadu Legislative Assembly Debates

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

28th and 29th February and 1st, 2nd, 4th, 5th and 6th March 1968.

Volume IX (Nos. 1 to 7).

TABLE OF CONTENTS.

Wednesday, 28th February 1968.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ...	i-iv
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly	v
List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies	vi-xi
1. Questions and Answers	1-22
2. Announcement— Adjournment Motions	22
3. Presentation of the Budget for 1968-69	23-51
4. Motion— Reading of Budget speech by the Leader of the House	31
5. Papers laid on the Table of the House	51-53

Thursday, 29th February 1968.

1. Obituary Reference— Thiru S. Ponnuswami Nadar, ex-M.L.A. ...	149
2. Questions and Answers	149-176

Thursday, 29th February 1968—cont.

PAGES

3. Adjournment Motions—
 (i) Fast by students of the Annamalai University 176–177
 (ii) Burning of the National Flag and part of the Constitution of India in Coimbatore and Madurai 177–180

4. Calling Attention—
 Prevention of Infective Hepatities (Jaundice) in Madras City 180–181

5. Announcement—
 Bills passed by the Council 181

6. General Discussion on the Budget for 1968–69 ... 181–220

7. Papers laid on the Table of the House 221–222

Friday, 1st March 1968.

1. Questions and Answers 225–242

2. Adjournment Motion—
 Glut of Handloom Cloth and the plight of weavers in Tirunelveli and Ramanathapuram Districts 242

3. Calling Attention—
 Dismantling of Railway Line between Mettupalayam and Ootacamund 242–244

4. General Discussion on the Budget for 1968–69 —cont. 244–295

5. Papers laid on the Table of the House 296

Saturday, 2nd March 1968.

Questions and Answers 297–315

2. Adjournment Motions—
 (i) Opposition of Shiv Sena to the screening in Bombay of films produced in Tamilnad 315–317
 (ii) Occupation of Katchatheevu by Ceylon Troops 317–320

3. General Discussion on the Budget for 1968–69—*cont.* 320, 324–369

4. Privilege Matter—
 Remarks of Thiru K. Vinayakam regarding raising of points of order 320–324

5. Papers laid on the Table of the House 369–370

PAGE

Monday, 4th March 1968.

1. Questions and Answers 371–397
2. Point of Order—
 Chief Minister's Health 397–398
3. Statement by Minister—
 Institution of Judicial Enquiry into the Police Firing at Aravankadu 398
4 Adjournment Motions—
 (i) Police Firing at Aravankadu 398
 (ii) Strike by the Madras Port and Dock workers 399
5. Announcement—
 Reply from the Governor to the Motion of Thanks 400
6. General Discussion on the Budget for 1968-69 cont. 400–446
7. Papers laid on the Table of House 446

Tuesday, 5th March 1968.

1. Questions and Answers 455–478
2. Adjournment Motion—
 Food Poisoning in the Government School for the Blind, Poonamallee 478–479
3. Calling Attention—
 Grant of increase of Dearness Allowance and City Compensatory Allowance to employees of the Madras State Electricity Board ... 479–480
4. Language of the Assembly 480–481, 482–485
5. Point of Order—
 Placing a copy of the Assembly Debates in the Legislature Library 481–482
6. General Discussion on the Budget for 1968–69—*cont.* 485–538
7. Papers laid on the Table of the House 538–539

Wednesday, 6th March 1968.

1. Questions and Answers 541–565
2. Adjournment Motions—
 (i) Speech in Andhra Pradesh Legislative Assembly *re.* Madras State Government Administration 565–566

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

PAGES

Wednesday, 6*th March* 1968—cont.

(ii) Inability of Tamil Nadu people to attend the festival at Katchatheevu 566–567

(iii) Attempt on life and person of Thiru E. V. K. Sampath and others at Madurai 567–568

(iv) Attack on Thiru S. Muthu, M.L.C. at Madurai **567–572**

3. Points of Order—

(i) Adjournment Motions, raising in the House after consent had been withheld **567**

(ii) Assembly proceedings placing of copy in Legislature Library 572–573

4. Calling Attention—

Withering of crops, remission of ladn-tax and postponement of collection of loan instalments in Madurai, Ramanathapuram districts ... 573–575

5. General Discussion on the Budget for 1968–69—*cont.* 575–615

6. Papers laid on the Table of the House **615**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

A.M./Ad. Motion	...	Adjournment Motion
Ann.	...	Announcement
B.O.H.	...	Business of the House
C.A.	...	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	...	Calling Attention Statement
Consid.	...	Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee.

	(iii) Amendment to circulate.
	(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
	(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl. ...	Consideration of clauses of a Bill.
D.E.E. ...	Demands for Excess Expenditure.
Dis. S.D. ...	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G. ...	Demands for Supplementary Grants.
G.A. ...	Governor's Address.
G.D. ...	General Discussion.
H.A.H. Dis./H.H.D. ...	Half-hour Discussion.
Int. ...	Introduction stage of a Bill.
L.A. ...	Legislative Assembly.
L.C. ...	Legislative Council.
M. ...	Motion.
P.M. ...	Privilege Motion.
R/Res. ...	Resolution.
St. ...	Statement.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY
10 OCT 1968
...LATURE, MADRAS

தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழக ஆளுநர்:
சர்தார் உஜ்ஜல் சிங்.

1. **மாண்புமிகு** திரு. சி. என். அண்ணாதுரை (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், உணவு உற்பத்தி.

2. **மாண்புமிகு** திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலை வாய்ப்பும், பயிற்சி அளித்தலும் கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும் சட்டப் பேரவையும்.

3. **மாண்புமிகு** திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசன திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. **மாண்புமிகு** திரு. கே. ஏ. மதியழகன் (உணவு வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. **மாண்புமிகு** திரு. ஏ. கோவிந்தசாமி (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. **மாண்புமிகு** டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது-பொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. **மாண்புமிகு** திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகள், பூதான, கிராமதான இயக்கம், கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் கிட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

Governor of Madras

SARDAR UJJAL SINGH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI *(Chief Minister)*: *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN *(Minister for Education and Industries)*: *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI *(Minister for Public Works)*: *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN *(Minister for Food and Revenue)*: *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY *(Minister for Agriculture)*: *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU *(Minister for Harijan Welfare and Information)*: *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN *(Minister for Law and Co-operation)*: *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (*Minister for Public Health*) : *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. The Hon. Thiru M. MUTHUSWAMY (*Minister for Local Administration*) : *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project and Ex-servicemen.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழக சட்டப் பேரவையின்
முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்

போவைத் துணைத் தலைவர்

புலவர் கா. கோவிந்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.,

உதவிச் செயலாளர்கள்

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்.எல்.பி.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி.)

திரு. ஜி. இராகவன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் எண்.	உறுப்பினர் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
1	அப்துல் கபூர் சாகிப், எம்.	இராணிப்பேட்டை.
2	ஆதித்தனார், சி.பா. (பேரவைத் தலைவர்).	ஸ்ரீவைகுண்டம்.
3	அக்னிராஜு, எஸ்.	திருப்பரங்குன்றம்.
4	அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமைக் கொரடா).	உப்பிலியாபுரம்.
5	அழகர்சாமி, சோ.	கோயில்பட்டி.
6	அழகுத்தேவர், எஸ்.	சிவகாசி.
7	அலங்காரம், மு.	கடலாடி (செ. வ.).
8	ஆனந்தன், மு.	ரிஷிவந்தியம் (செ.வ.).
9	ஆண்டி என்ற குருசாமி, கு.	ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.)
10	அண்ணாமலை, சி. வி. எம்.	கடம்பத்தூர்.
11	அண்ணாமலை, வி.டி.	பெரணமல்லூர்.
12	அரங்கநாதன், ஆர். என்.	சோளிங்கபுரம்.
13	அரங்கண்ணல், இராம.	மயிலாப்பூர் (சென்னை மாநகரம்).
14	அரசு, அ. பொ.	திருவொற்றியூர்.
15	ஆறுமுகம், அ.	எடப்பாடி.
16	ஆறுமுகம், எஸ்.	வீரபாண்டி.
17	ஆலடி அருணா	ஆலங்குளம்.
18	ஆசைத்தம்பி, ஏ.வி.பி.	எழும்பூர் (சென்னை மாநகரம்).
19	ஆதிமூலம், டி.எஸ்.	சேரன்மகாதேவி.
20	பாலன், எம்.சி.	நாகர்கோவில்.
21	பாலகிருஷ்ணன், ஏ.கோ.	வானூர் (செ.வ.).
22	பலராமன், இல.	கணியம்பாடி.
23	பாலசுப்பிரமணியன், செ.	பெருந்துறை.
24	பாலசுப்பிரமணியன், எ.	திண்டுக்கல்.
25	பெள்ளி கௌடர், ஜெ.	கூனூர்.
26	பாரதி மோகன், கோ.	குத்தாலம்.
27	பூபதி, எம்.	கோயம்புத்தூர்-கிழக்கு.
28	பூவராகன், கோ.	விருத்தாசலம்.
29	போஜன், கே.	உதகமண்டலம்.
30	சீமைச்சாமி, கரு.	மானாமதுரை.
31	சிதம்பரநாத நாடார், எ.	கொளச்சல்.
32	சின்னராஜி கவுண்டர், சி. கே.	திருப்பத்தூர்.
33	சின்னச்சாமி, மு.	ஈரோடு.
34	சின்னசாமி, வி.	ஏர்க்காடு (ஆ.வ.).
35	சித்தன், என். எஸ்.வி.	திருமங்கலம்.
36	தனுஷ்கோடி, பி.எஸ்.	திருவாரூர் (செ.வ.).

தொடர் எண்.	உறுப்பினர் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
37	தருமலிங்கம், ந.	திருத்துறைப்பூண்டி.
38	துரைராஜ், சு.ம.	திருவள்ளூர் (செ.வ.)
39	துரைபாண்டியன், என்.	நாங்குனேரி.
40	துரைராஜ், பி.	சங்கரன்கோவில் (செ.வ.).
41	துரைசாமி, சு.	திருப்பூர்.
42	துரையரசன், ஆ.	அறந்தாங்கி.
43	எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். ..	திருச்செந்தூர்.
44	இளம்வழுதி, இரெ.	கடலூர்.
45	எல்லப்பன், பி. எஸ்.	அச்சரப்பாக்கம் (செ. வ.).
46	கணேசன், எல்.	ஒரத்தநாடு.
47	கணேசன், எஸ்.	செம்பனார்கோவில்.
48	ஜார்ஜ், வ.	பத்மநாபபுரம்.
49	ஞானசம்பந்தன், சொ. இர.	நாகப்பட்டினம்.
50	கோமதிசங்கர திட்சிதர், க.	அம்பாசமுத்திரம்.
51	கோபால், எம்.	குன்றத்தூர் (செ. வ.).
52	கோவிந்தன், கே. ஆர்.	தாரமங்கலம்.
53	கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்).	செய்யாறு.
54	கோவிந்தராசன், சொ.	மதுரை சென்ட்ரல்.
55	கோவிந்தராசன், சி.	நெல்லிக்குப்பம்.
56	கோவிந்தராஜன், வி. எஸ்.	புரசவாக்கம் (சென்னை மாநகரம்).
57	கோவிந்தராசலு, கே.	கோயம்புத்தூர்-மேற்கு.
58	கோவிந்தராசன், ஆ.	புவனகிரி.
59	கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). ..	முகையூர்.
60	ஹபிபுல்லா பேக், டாக்டர்	ஹார்பர் (சென்னை மாநகரம்).
61	ஹாண்டே, டாக்டர் எச். வி.	பார்க் டவுன் (சென்னை மாநகரம்).
62	இராசரத்தினம், டி.	ஸ்ரீபெரும்புதூர்.
63	ஜேம்ஸ், ஜே.	திருவட்டார்.
64	ஜானகியம்மாள், திருமதி கே. பி. ..	மதுரை-கிழக்கு.
65	ஜயராஜ், பி.	நன்னிலம் (செ. வ.).
66	ஜயராமன், கி.	சேலம்-1.
67	ஜெயராமன், பி.	பேர்ணம்பட்டு (செ. வ.)
68	கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. ..	ஜெயங்கொண்டம் (செ.வ.).
69	கனகசபை, ரா.	சிதம்பரம்.
70	கந்தசாமி கவுண்டர், செ.	அரவக்குறிச்சி.
71	கந்தசாமி, எம்.	குளித்தலை.
72	கந்தசாமி படையாச்சி, மு.	உளுந்தூர்ப்பேட்டை.
73	கண்ணன், எம். ஆர்.	பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்).
74	கண்ணப்பன், எம்.	இணைத்துக்கடவு.

தொடர் எண்.	உறுப்பினர் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
75	கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம.	திருவாடானை.
76	கருணாநிதி, மு. (அமைச்சர்)	சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்).
77	கருப்பையா, ஆ.	கங்கைகொண்டான் (செ. வ.).
78	கருப்பையா, ஆர்.	அரியலூர்.
79	கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்).	சத்தியமங்கலம்.
80	காசிராமன், நா.	கும்பகோணம்.
81	கேசவனு, தே.	கள்ளக்குறிச்சி.
82	கிட்டப்பா, என்.	மாயூரம்.
83	கொளத்தூர் கோதண்டம்	மதுராந்தகம்.
84	கோதண்டராமன், வி. கே.	குடியாத்தம்.
85	கோதண்டராமைய்யா, கே. எஸ். ..	உத்தனப்பள்ளி.
86	கிருஷ்ணமூர்த்தி, கு.	பழனி (செ.வ.).
87	கிருஷ்ணமூர்த்தி, சி.	கொடிவாசல்.
88	கிருஷ்ணமூர்த்தி, மு.	பேராவூரணி.
89	கிருஷ்ணன், அ.	மங்களூர் (செ.வ.).
90	கிருஷ்ணன், ஈ. ஆர்.	சேலம்-2.
91	கிருட்டிணன், நா.	காஞ்சிபுரம்.
92	கிருஷ்ணசாமி கவுண்டர், ரா.	அவிநாசி.
93	குமாரசாமி, கே. என்.	பல்லடம்.
94	குப்பம்மாள், திருமதி சு.	போளூர்.
95	மாதவன், செ. (அமைச்சர்)	திருப்பத்தூர்.
96	மகாதேவன், ப.	கன்யாகுமரி.
97	மலைச்சாமி, பெ.	மேலூர்.
98	மலைக்கண்ணன், வீ.	இளையாங்குடி.
99	மணி, கே.பி.எஸ்.	சீர்காழி (செ.வ.).
100	மணி, எம். எஸ்.	திருச்சிராப்பள்ளி-1.
101	மணி, வி. எஸ்.எஸ்.	ஆத்தூர்.
102	மாணிக்கவாசகம், இரா.	தொண்டாமுத்தூர்.
103	மணியன், பி.எஸ்.	சோழவந்தான்.
104	மாரிமுத்து, அ.	ஆடுதுறை.
105	மாரிமுத்து, ஏ.ஆர்.	பட்டுக்கோட்டை.
106	மாரிமுத்து, மூ.	தலைவாசல் (செ.வ.).
107	மார்டின், டி.	சாத்தான்குளம்.
108	மருதாசலம், என்.	பேரூர் (செ.வ.).
109	மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) ..	ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்).
110	மெய்யப்பன், சா.	காரைக்குடி.
111	மேத்தா, எம்.	பெரியகுளம்.
112	மூக்கையா தேவர், பி.கே.	உசிலம்பட்டி.
113	முனுசாமி கௌண்டர், வி.எம். ..	கிருஷ்ணகிரி.

தொடர் எண்.	உறுப்பினர் பெயர்.	தொகுதி.
(1)	(2)	(3)
114	முனுசாமி, ரா.ரா.	மேல்மலையனூர்.
115	முனியாண்டி, எ.	நிலக்கோட்டை (செ.வ.).
116	முனு. ஆதி	திருப்போரூர்.
117	முருகையன், புலவர் க.	திருவையாறு.
118	முருகேசன், க.	பாலக்கோடு.
119	முருகையன், எஸ்.	கலசபாக்கம்.
120	முனுசாமி, செஞ்சி, வெ.	செஞ்சி.
121	முத்தையா, கே. கே.	கடலூர்.
122	முத்தையா, மு.	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
123	முத்துலிங்கம், எஸ்.	வந்தவாசி (செ.வ.).
124	முத்துசாமி, பா. க.சி.	பெண்ணாகரம்.
125	முத்துசாமி, மா. (அமைச்சர்)	நாமக்கல்.
126	முத்துச்செல்வன், பு.செ.	முசிறி.
127	நாச்சிமுத்து, என்.	ஒட்டன்சத்திரம்.
128	நாகலிங்கம், பா.	பொன்னேரி (செ.வ.)
129	நாகசுந்தரம், ஆர்.	திருச்சிராப்பள்ளி-2.
130	நல்லசிவன், க. ர.	மொடக்குறிச்சி.
131	நல்லசாமி, தோ. மு.	களூர்.
132	நஞ்சன், சி.	கூடலூர் (செ.வ.)
133	நரசிம்மன, வ. கி.	ஆரணி.
134	நாராயணன், இரா.	வரகூர்.
135	நடராசன், மு. க. து.	லால்குடி.
136	நடராஜன், ஜி.	காட்பாடி.
137	நடராசன், ஈ. எம்.	அந்தியூர்.
138	நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.)	திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்).
139	பச்சையப்பன், எஸ். பி.	சங்கராபுரம்.
140	பழனி, சி.	ஓமலூர் (செ.வ.)
141	பழனியம்மாள், திருமதி வி. ப. ..	தாராபுரம் (செ.வ.)
142	பழனிவேல் ராஜன்	தேனி.
143	பன்னீர்செல்வம், எம்.	ஆம்பூர் (செ.வ.)
144	பரமசிவ கவுண்டர், பி. என்.	பொங்களூர்.
145	பரமசிவம், எஸ்.	ஆண்டிப்பட்டி.
146	பரிசுத்த நாடார், வ. ஒய். எஸ்.	தஞ்சாவூர்.
147	பட்டாபி நாயுடு, எ.	காவேரிப்பட்டணம்.
148	பீர் முகமது, ஹாஜி. ம. மு.	மேலப்பாளையம்.
149	பெரியசாமி, பெ.	ராசிபுரம்.
150	பெருமாள், ஏ. ஆர்.	கரியாப்பட்டி.
151	பொன்னம்பலம், புலவர் பொ. ..	திருமயம்.
152	பொன்னப்ப நாடார், ஆர்.	விளவங்கோடு.
153	பொன்னுமலை, தி.	மணமரத்துப்பட்டி
154	ராஜா, ஏ. எம்.	பவானி.

தொடர் எண். (1)	உறுப்பினர் பெயர். (2)	தொகுதி. (3)
155	ராசகோபால், க. மு.	உத்திரமேரூர்.
156	ராஜமன்னுர், எஸ். ஏ.	வாணியம்பாடி.
157	இராசாங்கம், மா.	கம்பம்.
158	ராஜாங்கம், என்.	குறிஞ்சிப்பாடி (செ.வ.)
159	ராஜவேலு, டி. ஏ.	திருச்செங்கோடு.
160	ராமச்சந்திர துரை, ரா.	கந்தர்வக்கோட்டை.
161	இராமச்சந்திரன், க. ந.	ஆண்டிமடம்.
162	ராமச்சந்திரன், எம். ஜி.	பரங்கிமலை.
163	இராமச்சந்திரன், எஸ்.	பண்ருட்டி.
164	ராமலிங்கம், எஸ்.	ஸ்ரீரங்கம் (செ.வ.)
165	இராமமூர்த்தி, க.	திண்டிவனம்.
166	இராமன், மு.	கண்டமங்கலம் (செ.வ.)
167	ராமன், ஓ. பி.	மேலூர்-தெற்கு (செ.வ.)
168	இராமராசன், வ.க.	பவானிசாகர் (செ.வ.)
169	இராமசாமி, இ.	வால்பாறை (செ.வ.)
170	ராமசாமி கவுண்டர், கே.எம்.	கோபிசெட்டிப்பாளையம்.
171	ராமசாமி நாயுடு, எஸ்.	சாத்தூர்.
172	ராமசாமி, எஸ்.ஜே.	அரக்கோணம்.
173	இராசு, ஜே.எஸ்.	பெரம்பலூர் (செ.வ.)
174	இரத்தினசபாபதி, மு.	விளாத்திகுளம்.
175	ரெத்தினதேவர், ரா.	முதுகுளத்தூர்.
176	சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
177	சகாதேவக் கண்டர், கே.	தண்டராம்பட்டு.
178	சாமிநாதன், கே.என்.	வெள்ளக்கோயில்.
179	சங்கரய்யா, என்.	மதுரை மேற்கு.
180	சந்தானம், பி.எஸ்.	செங்கம் (செ.வ.)
181	சாரதி, மா.பா.	வேலூர்.
182	சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்).	பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்)
183	சீனிவாசன், பெ.	விருதுநகர்.
184	செல்லக் கவுண்டர், அ.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
185	சேனுபதி, அ.	காங்கேயம்.
186	சேதுராமன், சி.	சிவகங்கை.
187	சண்முகம், எம்	விழுப்புரம்.
188	சண்முகசுந்தரம், அ.ப.	பொள்ளாச்சி.
189	சண்முகம், வி.எஸ்	விராலிமலை.
190	சிறைமீட்டான், தொ.க.	பரமக்குடி (செ.வ.)
191	சிவஞானம், ம. பொ.	தியாகராயநகர் (சென்னை மாநகரம்.)
192	சிவபெருமாள், க.ந.	ஆத்தூர்.
193	சிவசாமி, மு.ச.	தூத்துக்குடி.
194	சிவசுப்பிரமணியன், எஸ்.	காட்டுமன்னார் கோயில் (செ.வ.)
195	சோமசுந்தரம், ந.	வலங்கைமான் (செ.வ.)
196	சௌந்தரபாண்டியன், நா.	ராதாபுரம்.

தொடர் எண். (1)	உறுப்பினர் பெயர். (2)	தொகுதி. (3)
197	சௌந்தரபாண்டியன், பெ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
198	சௌந்தரராஜ மூப்பனர், இரா. ..	பாபநாசம்.
199	சுந்தர பாரதி, சௌடி எஸ். ..	அருப்புக்கோட்டை.
200	சீனிவாசன், சு.	போடிநாயக்கனூர்.
201	சுவாரெஸ், திருமதி ஏ.	நியமன உறுப்பினர்.
202	சுப்பராஜா, ஏ அ.	இராஜபாளையம்.
203	சுப்பையா, ஆ.கு, ...	கோட்டூர் (செ.வ.)
204	சுப்பையா, கே.வி.	ஆலங்குடி.
205	சுப்பையா முதலியார், ஏ.ஆர். ..	கடையநல்லூர்.
206	சுப்பிரமணியம், அ.லெ.	திருநெல்வேலி.
207	சுப்பிரமணிய கவுண்டர், எம். ..	தர்மபுரி.
208	சுப்பிரமணியம், இ.எம்.	திருக்கோவிலூர்.
209	சுரேந்திரன், எம்.	மேட்டூர்.
210	சுவாமிநாத உடையார், த.சி. ..	மன்னார்குடி.
211	சுவாமிநாதன், வை.	திருவெறும்பூர்.
212	தம்பி நாயக்கர், பா.	வடமதுரை.
213	தங்கப்பன், டி.	இராமநாதபுரம்.
214	தவமணி தேவர், வி.	சேடப்பட்டி.
215	தீர்த்தகிரி, ந.	ஹரூர் (செ.வ.)
216	தீர்த்தகிரி கவுண்டர், தி.	ஊத்தங்கரை.
217	திம்மராய கவுண்டர், தி. சி.	நாட்ராம்பள்ளி.
218	திப்பையா, டி.டி.எஸ்.	மேட்டுப்பாளையம்.
219	வடிவேலு, எஸ்.கே.	தொட்டியம்.
220	வரதராஜன், என்.	வேடசந்தூர்.
221	வேதாசலம், மு.	வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்).
222	வீரமணி, சி.	சங்கரி (செ.வ.)
223	வீராசாமி, ந.	ஆர்க்காடு.
224	வேலப்பன், சி. வே.	கபிலமலை.
225	வெள்ளத்துரை, ஏ.	வாசுதேவநல்லூர்.
226	வேலுசாமி, பி.	சிங்கநல்லூர்.
227	வெங்கடாசல தேவர், பெ.	வேதாரண்யம்.
228	வெங்கடசாமி, பி.	ஹோசூர்.
229	வேழவேந்தன், கா.	கும்மிடிப்பூண்டி.
230	விஜய ரகுநாத தொண்டமான், ஆர். ..	புதுக்கோட்டை.
231	விஜயராஜ், தா.	திருவண்ணாமலை.
232	விநாயகம், கே.	திருத்தணி.
233	விசுவநாதன், செ. கோ.	செங்கற்பட்டு.
234	வில்லியம், எம்.	கிள்ளியூர்.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

தொடர் எண். (1)	பெயர். (2)
1	அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்).
2	நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினக்கள்

மலை ஏறும் பயிற்சிக் கழகம்

*90. வின—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நமது மாநிலத்தில் உதகமண்டலத்தில் மலை ஏறும் பயிற்சிக் கழகம் மத்திய அரசு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : மலையேறும் பயிற்சிக் கழகம் நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட விளையாட்டுக் கழகம், உத்திரகாசி நேரு மலையேறும் பயிற்சிக் கழகத்தின் உதவியுடன் 1967-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 16-ம் தேதியிலிருந்து 72 மாணவர்களுக்கு மலை ஏறும் பயிற்சி அளித்தது.

திரு. இல. பலராமன் : இந்தப் பயிற்சியின் நோக்கம் யாது ? இது எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? இதற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு ஏதாவது மானியம் கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலை ஏறும் பயிற்சி போர் முறைக்குத் தேவைப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றதால், இமய மலையிலே இந்தப் பயிற்சி நடத்தப்படுகின்றது. நீலகிரியில் இந்தப் பயிற்சியை ஏற்படுத்துவதன் மூலம் பல முறைகளிலும் பயன்படலாம் என்று அரசாங்கத்தின் மூலமாகப் பாதுகாப்புத் துறைக்கு எழுதியதன் பேரில் அவர்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என்று குறிப்பிட்ட காரணத்தினல் நீலகிரி விளையாட்டுக் கழகம் அதைத் துவக்க முன் வந்தது. உத்திரகாசி நேரு பயிற்சி நிலையம் இதற்கு உதவி செய்கிறது. 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 16-ம் தேதி முதல் மே 27-ம் தேதி வரையில் 72 மாணவர்களுக்கு மலை ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்காக ரூ. 8,226·41 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக வேண்டிய வேறு பல பொருள்களையும் இந்த நிலையம் இலவசமாக வழங்கியிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தப் பயிற்சி பெறுவதற்கு கல்வி தகுதி ஏதாவது வேண்டுமா ? தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. மலையேறும் பயிற்சிக்கு உடல் தகுதிதான் முக்கியமாக கருதப்படுகிறது. கல்வித் தகுதி அவ்வளவு தேவையில்லையென்று நினைக்கிறேன்.

திரு. டி. மார்டின் : இந்த மலையேறும் பயிற்சி அளிக்க ஏதாவது பாடசாலை உண்டா ? இந்தப் பயிற்சியை உயர்தரப் பாடசாலையில் இணைத்து நாங்குநேரி, களக்காடு முதலிய மலைப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பயிற்சி பெறுமலேயே மலையேறும் பழக்கம் உள்ளவர்களாக சிலர் இருக்கிறார்கள். யார் யார் பயிற்சி பெறவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. லிப்டை உபயோகப்படுத்தாமலேயே மாடிப்படி உபயோகப்படுத்தினாலேயே அது ஒருவிதமான பயிற்சியாக இருப்பது போன்று அமையும்.

THIRU K. VINAYAKAM ; This kind of mountaineering exercise would be useful for warfare, especially in mountain warfare. What are the possibilities of employment for these trainees ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நோக்கத்தோடு இதை ஆரம்பிக்கவில்லை. மலையேறும் பயிற்சி பெற விரும்புகிறவர்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் அதாவது சீசன் நாட்களில் தான் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. இதில் 72 பேர்கள் விரும்பிப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : இப்போது பயிற்சிபெறுகிறவர்கள் என்ன நோக்கத்தோடு பயிற்சி பெறுகிறார்கள் ? பயிற்சி பெற்றவர்களுக்கு ஏதாவது சலுகைகள் வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்றைய விளையாட்டுக்களில் ஈடுபடுகிறவர்கள் பெறுகின்ற அடிப்படையிலே தான் இந்தப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதில் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : மலையேறும் பயிற்சிபற்றி மலையிலே வசிக்கக் கூடியவர்களுக்கு விவரமாகத் தெரியும். ஆகையால் அவர் களுடைய உதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலையேறும் பயிற்சியை விரும்புகிறவர்கள் தான் இதில் வந்து சேருகிறார்கள். உத்திரகாசி நேரு நிலையத்தில் இதைக் கற்றுக் கொடுப்பதற்கு வல்லவர்கள் இருக்கிறார்கள். இதிலிருந்து மூவர் இந்தப் பயிற்சி வழங்க ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளி இப்பொழுது ஏற்படாவிட்டாலும் ஆரம்பப் பயிற்சியாக இருக்கக்கூடிய வகையில் நீலகிரி மலைப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் இனிமேலாவது மலையேறும் பயிற்சிப் பள்ளியை அங்கு ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியப் பாதுகாப்புத் துறை இந்தப் பயிற்சிப் பள்ளியை அவசியம் இல்லையென்றும் ஆண்டுக்கு ஆண்டு குறிப்பிட்ட நாட்களில் பயிற்சியை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் பேரில் உத்திரகாசி நேரு நிலையத்தோடு தொடர்புகொண்டு இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை 72 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு விரும்பி வருகிறவர்கள் பயிற்சி பெற்றாலே போதும்.

திரு. எம். எஸ். மணி : பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் யார் நஷ்ட ஈடு கொடுப்பது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

Footwear Production-cum-*Training Units.*

THIRU A. M. RAJA ; Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the loss incurred in the Footwear Production-*cum*-Training Units in the State during 1965–67 ?

1968 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மிதியடிகளின் உற்பத்தி-பயிற்சி நிலையங்கள் நமது அரசிடம் ஒன்றுமில்லை. ஆனால் நமது அரசுக்குச் சொந்தமான தமிழக சிறு தொழில் கார்ப்பரேஷனிடம் நான்கு நிலையங்கள் உள்ளன. அவைகளில் மூன்று நிலையங்களில் 1965-66-ஆம் ஆண்டில் ரூ. 38,000 இழப்பு ஏற்பட்டது. ஒரு நிலையத்தில், ரூ. 27,000 லாபம் கிடைத்தது. 1966-67-ம் ஆண்டில் மேற்படி நிலையங்களில் இழப்பு ஒன்றுமில்லை. ஆனால் ரூ. 84,700 இலாபம் கிடைத்துள்ளது.

திரு. ஏ. எம். ராஜா : இந்தக் காலணிகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் உற்பத்தி செய்யும் காலணிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களா ? ஆம் என்றால், எந்தெந்த நாடுகளுக்கு என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

Dr. H. V. HANDE : What is the total production during the years 1965-66 and 1966-67 and what is the number of employees employed ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரம்பூர் தொழிற்சாலையிலே 1965-66-ல் எட்டு லட்சம் உற்பத்தி செய்யப்பட்டது. 1966-67-ல் 13 லட்சத்து 19 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. எவ்வளவு பேர்கள் வேலை செய்தார்கள் என்ற விவரம் இல்லை. பல்லாவரத் தொழிற்சாலையில் 1965-66-ல் 3 லட்சத்து 58 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. 1966-67-ல் 3 லட்சத்து 86 ஆயிரம் உற்பத்தி செய்யப்பட்டது. திருவல்லிக்கேணியிலுள்ள தொழிற்சாலை பெரம்பூருக்கு மாற்றப்பட்டு அந்தப் பெயரில்தான் நடைபெற்று வருகிறது. இதில் 1965-66-ல் ஒரு லட்சத்து 9 ஆயிரமும் 1966-67-ல் ஒரு லட்சத்து 99 ஆயிரமும் உற்பத்தி செய்யப்பட்டது. மாதவரத்தில் உள்ள தொழிற்சாலையில் 1965-66-ல் 62 ஆயிரமும் 1966-67-ல் இரண்டு லட்சத்து 97 ஆயிரமும் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு. வி. எஸ். எஸ் மணி : தமிழகத்தில் உற்பத்தியாகக்கூடிய காலணிகள் ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதியாளருக்கு அனுமதி லைசென்ஸ் ஏதாவது கொடுக்க மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபார்சு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

Thiru K. VINAYAKAM : What are the prices of these foot-wear of standard size in the factories mentioned above ? How do they compare with the prices prevailing in the private sector, namely, Bata and other companies ? Are these prices higher than those obtaining in the private sector or are they same ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய குறிப்பு இல்லை. அரசாங்கம் இதற்கு ஒரு முறை வைத்திருக்கிறது. ஆகும் செலவுக்குத் தகுந்தபடி எவ்வளவு விலை வைக்கலாம் என்று பார்த்து லாப நோக்கம் குறிப்பிட்ட அளவிலேதான் பார்த்து வைக்கப்படுகிறது. மார்க்கெட்டு விலையை நிர்ணயிக்க முடியாது. போட்டா போட்டி அடிப்படையில் விலைகளை ஏற்றவோ இறக்கவோ செய்வார்கள். இதுபற்றி பலர் சொல்லுவது கூடுமானவரை மலிவாகத்தான் இருக்கிறது என்ற நிலைமை இருந்து வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாதவரத்தில் இருக்கின்ற இந்த உற்பத்திச் சாலையில் உற்பத்தியாகின்ற மிதியடிகள் அனைத்தும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ? இங்கு உற்பத்தியாகக் கூடியவை நமக்குப் பயன்படுகிற அளவில் கொடுக்கப்படுவதில்லையென்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ; இங்கு உற்பத்தியாகக் கூடியவைகள் பெரும்பாலும் இங்கேயேதான் பயன் படுத்தப்படுகின்றன. வெளி நாடுகளுக்குப் போவதில்லை. கான்பூர், ஆக்ரா போன்ற இடங்களில் உற்பத்தியாகக் கூடியவைதான் பெரும்பாலும் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமையில் இருக்கின்றன.

திரு. தொ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, காலணி உற்பத்தி இந்த நாட்டுக்கு மிகப் பெரிய அளவிலே தேவைப்படுகின்றது. இப்பொழுது உற்பத்தி நிலையம், பயிற்சி நிலையம் இரண்டையும் ஒன்றாக வைத்து நடத்திக் கொண்டு வருகிறோம். அப்படியில்லாமல், நஷ்டம் வந்தாலும், உற்பத்தி நிலையம், பயிற்சி நிலையம் என்று தனித்தனியாக நடத்த வேண்டும். ஆகவே, இதை மேலும் விரிவுபடுத்துகின்ற நோக்கமுள்ள வகையில் அரசாங்கம் திட்டம் ஏதாவது வகுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விண்ணமங்கலத்தில் இருக்கும் தொழிற்சாலையை விரிவு படுத்த முயற்சி நடைபெற்று வருகிறது. 1965–66-ல் இருந்ததை விட 1966–67-ல் அதிக லாபம் பெறுகிற நிலைமை இருக்கிறது. 1965–66-ல் 11 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் 1966–67-ல் 84,700 ரூபாய் லாபம் கிடைத்தது, ஆக மொத்தத்தில் 1965–67-ல் லாபம் 73,700 ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆகவே, மேலும் இதை விரிவுபடுத்தி, லாபத்தை அதிகமாகப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, காலணி உற்பத்தி நிலையங்களில் எந்தெந்தவிதமான காலணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அவை வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றனவா ? அல்லது விற்பனை அரசாங்க நிறுவனங்களுக்கு மட்டுமா ? இந்த உற்பத்தி நிலையங்களில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வேண்டிய புரொட்டக்டிவ் ஃபுட் வேர் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஜெயில் டிபார்ட்மெண்டில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் பூட்ஸ்கள், செருப்புகள் இந்த நிலையங்களில் உற்பத்தியானவையே. மேலும், போலீஸ் துறை, டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் தொழிலாளர்களுக்கும் பூட்ஸ்கள், பெல்டு கள், கண்டக்டர் வைத்திருக்கும் தோல் பை போன்ற பொருள்கள் இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. தனியார் ஆர்டர் பேரிலும் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப் படுகின்றன. கனம் உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, பல்லாவரம் குரோம் லெதர் கம்பெனி, கார்டன் உட்ராஃப் கம்பெனி போன்ற தொழிற்சாலைகள் உள்ள இடமாக இருப்பதால், பல்லாவரத்திலுள்ள தொழிற்சாலையை மேலும் அதிகமாக விரிவுபடுத்தி, உற்பத்தியாகும் பொருள்களை விரிவான முறையில் விற்பனை செய்ய அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தொழிற்சாலை 1958-ல் ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு ரூ. 3 லட்சத்து 81 ஆயிரம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகி வருகின்றன. இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு இருந்தால், அரசாங்கம் அதைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கிராமக் கைத்தொழில் துறையில் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர்ஸ் அவர்களின் அதிகாரத்தின் கீழ் கிராமப்புறங்களில் நடைபெற்றுவரும் சிறு தொழில்களான காலணி உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு கைத்தொழில் நிலையம் சார்பாகத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இம் மாதிரியாக 6 நிலையங்கள் கூட்டுறவுத் துறையிலும், பல தனியார் துறைகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளினால் நல்ல லாபம் இருந்து, தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை இருந்தால், அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

திரு எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, நம் நாட்டில் தயாராகும் காலணிகளின் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தினால், வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்கள் ஏராளமாக வாங்கிச் செல்லுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இத்தொழிலை மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ? இத்தொழிலுக்கான பயிற்சி நிலையங்களில் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பாகுபாடின்றி பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1—3—1966 முதல் 28—2—67 முடிய தாராமங்கலத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் 12 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1—3—1967-ல் தொடங்கும் ஆண்டில் 12 பேர் பயிற்சி பெற வசதியளிக்கப்பட்டது. இப் பயிற்சி நிலையத்தில் குறிப்பிட்ட வகுப்பினர்தான் வந்து சேரவேண்டும் என்பதில்லை. பயிற்சிபெற விருப்பம் உள்ள எவரும் வந்து சேரலாம் பயிற்சிக் காலத்தில் மாதத்திற்கு 45 ரூபாய் ஸ்டைபண்டாகக் கொடுக்கப்படுகிறது.

நீண்ட தூர துரித பஸ்கள்.

***92. வின.—திரு ந. காசிராமன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—3—1967-ந் தேதியில் தமிழக அரசின் போக்குவரத்து இலாகாவில் இருந்த நீண்ட தூர பஸ்கள் (Long distance Express Buses) எத்தனை ?

(இ) 31—5—1967-ந் தேதி அன்று சர்க்கார் போக்குவரத்து இலாகாவில் இருந்த நீண்ட தூர பஸ்கள் எத்தனை ?

(உ) 1—3—1967-ந் தேதி அன்று நீண்ட தூர பஸ்களின் (Express Buses) மூலம் கிடைத்த வசூல் தொகை எவ்வளவு ?

(எ) 31—5—1967-ந் தேதி அன்று நீண்ட தூர பஸ்களின் மூலம் கிடைத்த வசூல் தொகை எவ்வளவு ?

(ஐ) 1—3—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த நீண்ட தூர பஸ்களின் கட்டண விகிதம் என்ன ?

(ஒ) 31—5—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த மேற்சொன்ன பஸ்களின் கட்டண விகிதம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) 1—3—1967-ல் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் இருந்த நீண்ட தூர விரைவு வண்டிகள்—170.

(இ) 31—5—1967-ல் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் இருந்த நீண்டதூர விரைவு வண்டிகள்—178.

(உ) 1—3—1967-ந் தேதி அன்று நீண்ட தூர விரைவு வண்டிகள் மூலம் கிடைத்த வசூல் தொகை—ரூ. 38,065,

(எ) 31—5—1967-ந் தேதி அன்று நீண்ட தூர விரைவு வண்டிகளின் மூலம் கிடைத்த வசூல் தொகை ரூ. 51,581.

(ஐ) 1—3—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த நீண்டதூர விரைவு வண்டிகளின் கட்டண விகிதம் :

சமவெளியில் மைலுக்கு—6 காசு.
மலைப்பகுதியில் மைலுக்கு—12 காசு.

(ஒ) 31—5—1967-ந் தேதி அன்று அமுலில் இருந்த மேற்சொன்ன வண்டிகளின் கட்டண விகிதம் :

சமவெளியில் மைலுக்கு—5 காசு.
மலைப்பகுதியில் மைலுக்கு—10 காசு.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, 1—3—1967-ல் விரைவு வண்டிகளின் மூலம் வசூல் தொகை ரூ. 38 ஆயிரம் என்றும், 31—5—67-ல் ரூ. 56 ஆயிரம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இந்த வித்தியாசம் ஏற்படக் காரணம் என்ன ? முன்பிருந்த அரசாங்கத்தின் கவனக் குறைவினுல்தான் முன்பு வசூல் குறைந்திருந்ததா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : 1—3—1967-ல் ஓடிய வண்டிகள் 127. 31—5—1967-ல் புதிய தமிழக அரசு ஓட்டிய வண்டிகள் 135. முன்பைவிட இப்பொழுது 8 வண்டிகள் கூடுதலாக ஓடின காரணத்தால் 51 ஆயிரம் ரூபாய் வசூல் கிடைத்தது என்று நான் சொல்ல முன்வரவில்லை முன்பிருந்த அரசாங்கம் மைலுக்கு 6 பைசா வீதம் கட்டணம் வைத்திருந்தது. புதிய தமிழக அரசு மைலுக்கு 5 பைசா என்று கட்டணத்தைக் குறைத்ததால், பொதுமக்கள் விரும்பி, "தமிழக அரசுப் போக்குவரத்து" பஸ்களில் பெருமளவில் பயணம் செய்ய ஆரம்பித்தனர். அதன் காரணமாகவே கூடுதலான வசூல் கிடைத்துள்ளது.

திரு. ப. மகாதேவன் : துணைத் தலைவர் அவர்களே, நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தின் போக்குவரத்து இலாகாவிலே, நம்முடைய போக்குவரத்து இலாகாவிலே இருப்பதைவிட வருமானம் குறைவாக இருந்தாலும், கேரள மாநில போக்குவரத்து இலாகா தொழிலாளர்கள் போனஸ் போன்ற வசதிகளில் அதிக லாபம் அடைகிருர்கள். ஆனல் நம்முடைய இலாகாவில் 60 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இந்தக் கேள்வி வசூலைப் பொறுத்தது. தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, பஸ் கட்டணத்தைக் குறைத்த காரணத்தால் கூடுதல் வருமானம் வந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். ஏப்ரல் 1-ம் தேதி முதல் சாதாரண பஸ்களில் ½ பைசா உயர்த்துவதாக இருக்கிறதே, இதனுல் ஏழைகள் பாதிக்கப்பட மாட்டார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இதுவும் பொதுமக்களின் நன்மைக்காகத்தான் ½ பைசா உயர்த்தப்பட்டிருக்கிறது. வெளியிலே ஓடும் சாதாரண வண்டிகளின் எண்ணிக்கை தனியார் துறையில் மிக அதிகமாக இருக்கின்றன. பொதுத் துறையில் சுமார் 200 அல்லது 300 வண்டிகள்தான் ஓடுகின்றன. ஆனுல் தனியார் துறையில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வண்டிகள் ஓடுகின்றன. தனியார் துறை பஸ் முதலாளிகள் மைலுக்கு 3 பைசா கட்டணம் வசூலித்துக் கொண்டுவந்தபோது அரசாங்கத் துறை பஸ்ஸில் 2 பைசாதான் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. வண்டிகளின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடும்போது தனியார் துறையில் தான் மக்கள் அதிகமாகப் பயணம் செய்துவந்தனர். அரசாங்கத்துறை பஸ்களில் மக்கள் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இப்பொழுது மைலுக்கு ½ பைசா கூடுதலாக, அதாவது மைலுக்கு 2½ பைசா வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும். பஸ் முதலாளிகள் எல்லாம் ஒரு மாநாடு கூட்டி, கலந்துரையாடி ஓர் ஒப்பந்தத்திற்கு வந்திருக்கிருர்கள். அதன்படி, மைலுக்கு 3 பைசா என்றிருப்பதை ½ பைசா குறைத்து 2½ பைசாவாகவும், பொதுத்துறையில் 2 பைசா என்றிருப்பதை ½ பைசா கூடுதலாக்கி 2½ பைசாவாக உயர்த்தியும் கட்டணம் வசூல் செய்யலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1968 பிரப்வரி 28]

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழக அரசு சொந்தமாக்கிக்கொள்கின்ற ரூட்களை நேரிடையான வழியில் இல்லாமல், 50 மைல் தூரத்தை 75 மைல் என்று கணக்கெடுத்து, எடுத்துக்கொள்கிறது. உதாரணமாக, கோவையிலிருந்து தாராபுரத்திற்கு 50 மைல் தூரம்தான் இருக்கிறது. இதை நேராக இல்லாமல், மேட்டுப் பாளையம் வழியாகக் கணக்கெடுத்துக் கொள்கிறது. கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் 50 மைல். மேட்டுப்பாளையத்திலிருந்து தாராபுரம் 25 மைல்—ஆக கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் வழியாக தாராபுரம் 75 மைல் என்று சொல்லி ரூட்களை எடுத்துக்கொள்கிறதே, இது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பஸ் முதலாளிகள் உரிமம்—பெர்மிட் பெறுகின்ற நேரத்தில் கணக்குப்போட்டு அவர்களுக்கு வழங்கப் படும் ரூட்கள்தான் இப்போது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, பஸ் முதலாளிகள் மாநாட்டில் ஒத்துக்கொண்டபடி, அரை பைசா உயர்த்துவது என்ற ஒப்பந் தத்தை அமல் நடத்த தேதி ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது, 1—4—1968 முதல் இது அமலாக இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, மைலுக்கு அரை பைசா வீதம் உயர்த்துவது என்ற அடிப்படையில், சர்க்கார் துறையில்கூட ஒரே ரூட்டில் சில பஸ்களில் கட்டணம் கூடுதலாகவும், சிலவற்றில் குறைவாகவும் இருப்பதைத் தவிர்த்து ஒரு சீராக முறைப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகளையெல்லாம் சமன்படுத்து வதற்காகத்தான் 1—4—1968 முதல் புதிய உத்தரவு அமலாக்கப்படவிருக் கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரசு பஸ் கட்டணத்தை 2½ பைசாவாக ஆக்கினால் தனியார் பஸ் முதலாளிகளும் ½ பைசா குறைப்பதாக ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படை யில் தான் இப்போது சர்க்கார் பஸ்களில் ½ பைசாவாக உயர்த்தப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரையில் உள்ள பஸ் முதலாளிகள் தான் அப்படி ஒப்புக்கொண்டார்கள் என்று வெளியில் சொல்லப் படுவது உண்மையா ? தனியார் பஸ் முதலாளிகளின் வேண்டுகோள் பேரில் இப்படிச் செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது தமிழக அரசின் தேசியமாக்கும் கொள்கைக்கு முரண்பாடானது இல்லையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனியார் பஸ் முதலாளிகள் ஒரு மகாநாடு கூட்டி அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒரு கோரிக்கையாக அரசினிடத்தில் வைத்தார்கள். அந்தக் கோரிக்கை களில் ஒன்றுதான் இந்தக் கோரிக்கை. மதுரையில் உள்ள பஸ் முதலாளிகளுடன் கலந்து பேசி செய்யவில்லை. தனிப்பட்ட முதலாளி களிடம் அப்படிப்பட்ட தொடர்பு எங்களுக்குக் கிடையாது. கனம் உறுப்பினருக்கு அப்படிப்பட்ட தொடர்பு இருந்தால் அதைச் சொல்வது உசிதமாக இருக்கும். எல்லாத் தனியார் பஸ் முதலாளிகளும் தான் அந்த மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கைக்கு அரசு இணங்குவதற்கும், தேசியமயமாக்கும் கொள்கைக் கும் சம்பந்தமே இல்லை. தமிழக அரசின் பஸ் தேசியமய மாக்கும் கொள்கை என்பது தனிப்பட்ட பஸ் முதலாளிகள் அத்தனைபேரையும் ஒழித்துக்கட்டும் கொள்கை என்பது அல்ல என்பது பலமுறை இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கோளத்தூர் கோதண்டம் : 1—3—1967 அன்று 127 பஸ்கள் ஓடின. 31—5—1967-ல் அது 135 பஸ்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தும் இடம் கிடைக்காமல் பிரயாணிகள் திண்டாடுகிற காரணத்தினால் இந்த எண்ணிக்கையை இன்னும் அதிகமாக்குகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 31—5—1967ல்135 வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன என்று சொன்னேன். இப்போது ஓடிக்கொண்டிருக்கிற வண்டிகள் 146

திரு. தோ. மு. நல்லசாமி : பஸ்களை அதிகப்படுத்தியிருப்பதோடு, பயணக் கட்டணத்தைக் குறைத்திருப்பது அதிக வசூலைத் தந்திருப்பதினால் இந்தக் கொள்கை மேலெழுந்தவாரியாக நல்லதாகத் தெரிகிறது. நாம் இத்துறையில் முதலீடு செய்கிற பணத்திற்கு ஈடுகட்டிக்கொள்ளுமா ? அதனால் மேலும் தொடர்ந்து நடத்தலாம் என்ற யோசனை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் கொடுத்த புள்ளி விவரப்படி 6 பைசா கட்டணத்தை 5 பைசாவாகக் குறைத்திருப்பதன் மூலம் வசூலில் அதிக அளவுக்கு ஏற்றத்தாழ்வு இருக்கிறது. இது சர்க்காருக்கு உற்சாகம் அளிப்பதாகவே இருக்கிறது.

திரு. செ. பாலசுப்ரமணியன் : பஸ் கட்டணம் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது ? நம்முடைய முதலீடு, அதற்கான வட்டி, பஸ்களில் தேய்மானம் ஆகிய எல்லாவற்றையும் அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்படுகிறதா ? அல்லது அட்ஹாக் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1—3—1967 இல் 6 காசாக இருந்த கட்டணத்தை 31—5—1967 இல் 5 காசாகக் குறைத்ததன் மூலம் அரசு பஸ் போக்குவரத்து துறைக்கு வருவாய் அதிகமாகவே வந்திருக்கிறது. இது நம்முடைய தேசீயமாக்கும் கொள்கைக்கு ஏற்பட்டிருக்கிற வெற்றியாக இருப்பதனால் மேலும் தேசீயமாக்கும் கொள்கையை விரிவுபடுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே அரசு தான் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை அடிப்படையில் விரிவுபடுத்திக்கொண்டு தான் வருகிறது.

DR. H. V. HANDE : Sir, while I am happy that as a result of the indirect competition the rates of the private buses have come down to a certain extent, I shall be happier still if there is direct competition between the Government and the private transport in the same routes as that would bring down the rates still further. At the same time, will this Government get any extra amount by increasing the rate by half a paisa ? As the Hon. Minister has stated before that by reducing the rate by one paisa, the revenue has increased. Based on the same hypothesis, will not the reduction in the rate by half a paisa reduce the revenue ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதனால் ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டு விடாது.

1968 பிப்ரவரி 28]

திரு. வ. ஜார்ஜ் : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் தனியார் பஸ்கள் சொற்பம் தான் ஓடுகின்றன. அங்கு 90 சதவீதம் சர்க்கார் பஸ்களேதான் ஓடுகின்றன. ஆகவே இந்த ½ பைசா உயர்வு அங்குள்ள ஏழை எளிய மக்களை பாதிக்காதா ? இப்போதே சில இடங்களில் தனியார் பஸ்களில் 20 பைசா வாங்கக் கூடிய இடங்களில் சர்க்கார் பஸ்களில் 22 பைசா வாங்கப்படுகிறது. மேலும் உயர்த்துவது பொது ஜனங்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாம் ஒரு மாவட்டத்து மக்களை வைத்து ஒரு காரியம் செய்வதில்லை. தமிழ் நாட்டு மக்கள் முழுமைக்கும் பார்த்து செய்திருக்கிறோம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, தேசியமாக்கப் பட்ட 121 ரூட்டுகளில் நம்முடைய பஸ்கள் 202 ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தனியார் பஸ்கள் நாலாயிரத்திற்கு மேல் ஓடலாம். நாம் ½ பைசா உயர்த்தினாலும், தனியார் பஸ்களில ½ பைசாவாக குறைக்கப்படும் என்பதனால் அதிகமான அளவுக்கு ஏழை மக்கள் நன்மை அடைவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வாதத்தை நான் ஒத்துக் கொண்டாலும் அவர்களும் 2 பைசா அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த இந்த சட்டசபையால் முடியுமா ? அல்லது மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மூன்று பைசா வரை வசூலிக்கலாம் என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ரயில் போக்கு வரத்து இல்லாத பகுதிகளில் குறிப்பாக மதுரை லோயர் காம்ப், திண்டுக்கல், கரூர் போன்ற பகுதிகளில் இரவு நேர அதிக பஸ் போக்குவரத்து விட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பகலிலேயே விபத்துக்களை தவிர்க்க முடியாத நிலையில் இரவு நேரத்தில் விடுவது என்றால் அதைப்பற்றி தீர யோசிக்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : இதுவரை தனியார் பஸ்கள் ஓடுகிற ரூட்டுகளில் அரசாங்கம் பஸ்களைவிட்டபோது தனியார் கட்டணங்களைவிட குறைவாகக் கட்டணத்தை வைத்து ஓட்டினார்கள். இப்போது தனியார் பஸ்களில் லைசென்சு காலாவதி ஆனபிறகு ஏகபோகமாக அந்த ரூட்டுகளில் அரசாங்க பஸ்கள் போகத்தொடங்கியவுடன் முன்பு குறைத்திருந்த கட்டணத்தை உயர்த்திக்கொண்டு விட்டார்கள் என்பது தெரியுமா ? குறிப்பாக முன்பு சென்னையில் இருந்து திருத்தணிக்கு தனியார் பஸ்களில் 2-25 ரூபாய் கட்டணம் வாங்கிக்கொண்டிருந்தபோது, சர்க்கார் பஸ்களுக்கு ரூ. 1-75 ஆகக் குறைத்துக்கொண்டார்கள். சென்னை-திருத்தணி ரூட்டை இப்போது ஏகபோகமாக எடுத்துக்கொண்டவுடன் இவர்களும் ரூ. 2-25 ஆக ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல சமரசத்தின் அடிப்படையில் ஏற்பட்ட விளைவு இது.

திரு. எ. பட்டாபி நாயுடு : தலைவர் அவர்களே, அரசாங்க சாதாரண பஸ்களுக்கும், எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கும் கூலர் வேறுபாடு இல்லாத காரணத்தினால் எக்ஸ்பிரஸ் பஸ்களை நிறுத்த மக்கள் முயற்சிப்பதை தடுக்க எக்ஸ்பிரஸ் பஸ் கவருக்கு ஒரு மாறுதலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. அ. பொ. அரசு: கட்டணக் குறைப்பு என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் சென்னையில் இருந்து ஊத்துக்கோட்டைக்கும், பெரியபாளையத்துக்கும் செல்கிற அரசாங்க பஸ்களில் ஒலு ப்ளாட்ரேட் வைத்திருக்கிறார்கள். சென்னையில் இருந்து மாதவரம் போகிற தனியார் பஸ்களில் 20 பைசா, அரசாங்க பஸ் என்றால் 50 பைசா என்று இருக்கிறது. இதனால் அரசாங்க போக்குவரத்து இலாகாவுக்கு உண்மையில் நட்டம் ஏற்படுகிறதென்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி கனம் உறுப்பினர் இதுவரை தெரிவிக்காமல் இருக்கும்போது எப்படித் தெரியும் ?

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சர்க்கார் பஸ்களில் மூலமாக ஏராளமான நஷ்டம் வந்திருப்பதாக ஒரு பத்திரிக்கைக் குறிப்புக் கூறுகிறதே, அது எந்த அளவுக்கு உண்மை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது மொத்த லாபநஷ்டக் கணக்கை பார்க்கிறபோது தெரியாது. தனிக்கேள்வி போட்டால் விவரம் தெரியும்.

திரு. ந. காசிராமன் : 1—3—1967 இல் 127 பஸ்கள் ஒரு நாளைக்கு எத்தனை ட்ரிப்புகள் ஓடின ? 31—5—1967 இல் 135 பஸ்கள் ஒரு நாளைக்கு எத்தனை ட்ரிப்புகள் ஓடின என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த விவரங்கள் இல்லை.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்திருந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு நான் 15 நிமிடங்களுக்கு மேல் கொடுத்திருக்கிறேன். அடுத்த கேள்வி 93 எடுத்துக்கொள்ளப்படும்.

***93 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளிக்கும் குற்றாலத்திற்குமிடையே அரசாங்க பஸ் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

11-00 முன் பகல் **திரு. வை. சுவாமிநாதன் :** குற்றாலம் இப்பொழுது தமிழ் நாட்டினுடைய ஏழைகளின் வாசஸ்தலமாக இருக்கிறது. ஆகவே சீஸன் காலத்திலாவது பஸ் விட ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சாவூரிலிருந்து செங்கோட்டைக்குச் செல்கின்ற பஸ்ஸில் குற்றாலத்திற்குச் செல்வதற்கு வழியிருக்கிறது. நாகர்கோவில், நாகப்பட்டிணம், தூத்துக்குடி, கொல்லம் இந்த இடங்களுக்குப் போகின்ற பாதையிலே குற்றாலத்தை இணைத்துப் பாதைகள் போகின்றன. மேலும் தேவைப்படுமானால் அதுபற்றி யோசித்து முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சீஸன் ஏற்படுகின்ற காலத்தில் பல்வேறு நகரங்களிலிருந்து, திண்டுக்கல் மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம் போன்ற இடங்களிலிருந்து குற்றாலத்திற்கு தனியார் துறையினர் பல

பஸ்களை விடுகிறார்களே, அதுபோன்று அரசாங்கமும் சர்க்கார் துறையில் பஸ் விடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொதுவாக எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும், விழாக்களுக்கும்கூட அவ்வப்பொழுது அரசாங்க பஸ்கள் விடப்படுகின்றன. அதைப்பற்றிய கோரிக்கைகளை பொது மக்கள் வைத்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம் போன்ற வாசஸ்தலங்களுக்கு அதிகமாகப் பிரயாணிகள் போகக்கூடிய வகையில், உற்சாகப்படுத்துகின்ற முறையில் அரசாங்கம் துரித பஸ்களில், போகவர, ரிட்டர்ன் டிக்கட் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி யோசிக்கலாம்.

*** 94. வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளிக்கும் பழனிக்குமிடையே அரசாங்க பஸ் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பொதுவாக திருச்சியிலிருந்து பழனி செல்வது என்றால் இடம் கிடைக்காமல் பயணிகள் கஷ்டப்படுகிறார்கள். ரிசர்வ் செய்தவர்களுக்குக்கூட சில சமயங்களில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற காரணத்தினால் அரசாங்க பஸ்கள் அங்கு விடுவதற்கு அரசாங்கம் புனராலோசனை செய்ய முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சையிலிருந்து பழனிக்கு செல்லுகின்ற பேருந்துகள் திருச்சி மார்க்கமாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதிகம் தேவையென்று இயக்குநர் அவர்கள் பரிசீலனை செய்வார்களானால் அதைச் சர்க்கார் கவனிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு ஒரே பஸ் கூடுதல் வசதிகளுடன் குறைந்த சீட்டுகளுடன் உள்ள ஒரு பஸ்ஸை விடுவதற்கு முந்தைய அரசு திட்டமிட்டிருந்தது. அதை இந்த அரசாங்கம் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இடம்பெறவில்லை. இதில் உறுப்பினர் அவர்களுக்கு அக்கறை இருக்குமானால் தனியாகக் கேள்வி போட்டால் அவருக்கும் நல்லது எல்லோருக்கும் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி திருச்சியிலிருந்து பழனிக்கு அரசாங்க பஸ் விடுவதைப்பற்றியது. ஆகவே அதைப்பற்றிய கேள்விகளை மட்டும் கேட்கவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பழனியிலிருந்து தஞ்சைக்கு பஸ்விடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் விடப்படாமல் இருக்கிறது. ஆகவே அதை விரைவிலே விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப்பற்றி உறுப்பினர் நினைவுறுத்தி எழுதினால் கவனிக்கலாம்.

திரு கு. கிருஷ்ணமூர்த்தி : பழனிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து, சேலத்திலிருந்து மதுரையிலிருந்து, கோவையிலிருந்து சர்க்கார் பஸ்கள் விட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர் கேட்கின்ற அளவில் பக்தர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை.

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம்

*** 95 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பால் கூட்டுறவு சங்கத்தில் பாலைக் குளிர்ப்பதனம் செய்யும் இயந்திரம் எந்த தேதியிலிருந்து இயங்கி வருகிறது ?

(இ) மேற்படி சங்கத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் குளிர் பதனம் செய்யப்பட்டு விற்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பாலைக் குளிர்பதனம் செய்யும் இயந்திரம் 13—8—1967 அன்று செயல்படத் தொடங்கியது.

(இ) இச் சங்கத்தின் அன்றாடம் 1,250 லிட்டர் பால் குளிர்பதனம் செய்யப்பட்டு பக்குவப்படுத்தப்படுகிறது.

*** 96 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்திற்குப பால் குளிர்பதனம் செய்யும் கட்டிடத்தை எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இறுதி மதிப்பீட்டுக்குப் பின்னரே மொத்தச் செலவினை மதிப்பிட முடியும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற குளிர்பதனம் செய்யும் இயந்திரத்தின் மூலமாக நாளொன்றுக்கு பத்தாயிரம் லிட்டர் பாலை தயார் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு இப்பொழுது நாள் ஒன்றுக்கு 1,200 லிட்டர் பால்தான் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அங்கே பாலை அதிகமாகக் குளிர்பதனம் செய்வதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. விரைவிலே 10,000 லிட்டர் பாலை தயாரிக்கிற அளவுக்கு முயற்சி எடுத்து நிர்வாக அமைப்பிலே குறையிருந்தால் மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தற்பொழுது 1,250 லிட்டர் பால் நாளொன்றுக்குப் பக்குவப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் ஒரு 500 லிட்டர் பக்குவப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். தற்பொழுது 16 பால் கூட்டுறவு சப்ளை யூனியன்கள் மூலம்தான் கிடைக்கிறது. இவற்றைப் பெற்று இந்தக் காரியம் நடைபெறுகிறது. இன்னும் பால் சப்ளை யூனியன் களை விஸ்தரிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சொஸைடிகள் அதிகமாகிற நிலையில் தான் அது அதிகமாகும். இந்தச் சாதனம் ஒரு நாளில் 6,000 லிட்டர் முழு அளவில் செய்யலாம். அதற்கு முயற்சி செய்கிறோம். நிர்வாகக் குறை ஒன்றும் இல்லை. இப்பொழுதுதான

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட நிலை இல்லை. பொதுவாக, நாட்டில் பால் பற்றாக்குறை நிரம்ப இருக்கிறது. ஆகவே, கால்நடைகளை அபிவிருத்தி செய்வது, பால் உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவற்றிலே அரசாங்கம் தீவிரமான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : திருப்பூரில் அமைக்கப்பட்டிருக்கும் பால் குளிர்பதனச்சாலையில் 6,000 லிட்டர் பாலைக் குளிர்பதனம் செய்யும் தகுதி இருந்தும் 1,250 லிட்டர் பால்தான் தற்போது குளிர்பதனம் செய்யப்படுகிறது. 6,000 லிட்டர் அளவுக்குப் பால் கிடைக்க வசதி இருக்கிறதா ? அந்த வசதி இல்லையென்றால் அந்த அளவுக்குச் செலவு செய்து குளிர்பதன யூனிட்டை அமைக்க வேண்டிய அவசியம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வசதி இல்லாமல் இல்லை. தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிற சப்ளை யூனிட்டுகள் மிகக்குறைவாக இருக்கின்றன. மேற்கொண்டு பாலை பெறுவதற்காக இந்தச் சங்கங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு கால்நடைகளை வாங்குவதற்கு அரசாங்கம் கடன் வசதி செய்திருக்கிறது. மேலும் இரண்டு மூன்று குளிர் பதன சாதனங்களை நிறுவுவதற்குக் கூட திருப்பூர் பகுதியில் வாய்ப்புகள் இருக்கின்றன.

திரு. செ. பாலசுப்பிரமணியம் : 6,000 லிட்டர் பால் குளிர்பதனம் செய்வதற்கு வசதி இருந்தும் 1,250 லிட்டர் பால்தான். குளிர்பதனம் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியில் ஊத்துக்குளி போன்ற பல ஊர்களில்—ஊத்துக்குளியில் மட்டும் 35-க்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள் சென்னை, பெங்களூர் போன்ற நகரங்களுக்குப் பால் அனுப்பும் அளவுக்குப் பால் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது போன்ற ஊர்களில் இருந்தும் பாலை வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த அளவுக்கு இதனுடைய அமைப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. ஊத்துக்குழியைப் பொறுத்த வரை சாதகமான நிலைமை இருக்குமானால் அதைப்பற்றியும் யோசிக்கலாம்.

நீலகிரி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட படிப்பு உதவித் தொகை

*97. வினா :—**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–68-ம் ஆண்டுக்கு நீலகிரி மாவட்டத்திற்கு பிற்பட்ட, அரிஜன மாணவர்களுக்கு உதவித் தொகை (scholarship) வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை முறையே எவ்வளவு ?

(இ) உதவித் தொகை கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :

தமிழக அரசு உதவித்தொகைகள்.	மெட்ரிக் முன் படிப்பு.	மெட்ரிக் மேற்படிப்பு.	மொத்தம்.
	ரூ.	ரூ.	ரூ.
(அ) பிற்பட்ட வகுப்புகள்.	5,000	28,200	33,200
அரிசன வகுப்பினர்.	39,300	100	39,400
(இ) பிற்பட்ட வகுப்பினர்.	350	359	..
அரிசன வகுப்பினர்	2,796	..	..

1968 பிப்ரவரி 28]

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்டிருப்பது போல் மற்ற மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது படிக்கக்கூடிய மாணவர்களில் முக்கால்வாசி பேருக்கு மேல் ஸ்காலர்ஷிப் வரவில்லை என்ற நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : நீலகிரி மாவட்டத்திற்கு மாத்திரமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றவற்றைப் பற்றிக் கேள்வி கேட்டால் பதில் தரப்படும். பொதுவாக, விண்ணப்பம் செய்துள்ள அரிசன மாணவர்கள் அத்தனை பேருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. பிற்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரை சில தகுதிகளை வைத்துக்கொடுக்கிறபடியால் ஒரு சிலருக்குத் தரப்படாமல் இருக்கலாம்.

திரு. கே. போஜன் : கடந்த ஆண்டில் உதவிப் பணம் கோரிய அரிசன மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இல்லாது குறைவாக இருந்ததால் எல்லோருக்கும் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. ஆகவே அந்த உதவித் தொகை ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : 1967–68ல் எந்த அரிசன வகுப்பு மாணவரும் மெட்ரிக் மேற்படிப்புக்கு உதவித் தொகை கோரி விண்ணப்பம் செய்யவில்லை. மெட்ரிக் முன் படிப்பைப் பொருத்தவரை 2,796 பேர் விண்ணப்பம் செய்து அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : அரிசனங்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக கொடுப்பதற்காக தகுந்த அளவு நிதி ஒதுக்கப்படுகிறதா அல்லது விகிதாசாரப்படி ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறதா ? ஒதுக்கப்பட்ட நிதி போதுமான அளவு இல்லையென்றால் சப்ளிமெண்டரி கிராண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. சப்ளிமெண்டரி கிராண்டு போட்டு கொடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டால் அதுவும் செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : ஒவ்வொரு ஜில்லாவிலும், அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது ? சிறிய ஜில்லா, பெரிய ஜில்லா என்ற அடிப்பயிலா அல்லது அந்த மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலா ? எல்லா ஜில்லாக்களுக்கும் சமமாக ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : சிறிய ஜில்லா, பெரிய ஜில்லா என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது. பிற்பட்ட மாணவர்களாக இருந்தால், மார்க்குகள், ஆண்டு வருமானம் இவைகளை அடிப்படையாக வைத்து உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அரிசன மாணவர்கள் யாராக இருந்தாலும் தரப்படுகிறது.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : பிற்பட்ட மாணவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகுதிகள் என்றால் என்னென்ன தகுதிகள் ? ஏழையாக இருந்தும், 100-க்கு 50 மார்க்குகள் பெற்றிருந்தும் உதவித் தொகையைப் பெறமுடியாத பிற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவை என்னென்ன தகுதிகள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : வருமானம் எல்லை, வாங்கிய மார்க்குகள் அடிப்படையில் இந்த உதவித் தொகை பிற்பட்ட மக்களுக்குத் தரப்படுகிறது.

[1968 பிப்ரவரி 28

திரு. கே. விநாயகம் : இந்தச் சலுகைகளைப் பொறுத்தவரை, அரிசன மாணவர்கள் விண்ணப்பம் செய்தாலே கொடுத்து விடுகிறார்கள். பிற்பட்ட இனத்தவர்கள் மட்டும் 100-க்கு 45 மார்க்குகள் வாங்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். இதனால்தான் சிக்கல் வருகிறது. ஆகவே, பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுப்பதற்கும் சலுகைப் பணத்தை அதிகரித்து 45 மார்க்குகள் வாங்க வேண்டுமென்பதை 40 என்று குறைத்து இப்போது இருக்கும் விதிமுறையைத் திருத்தியமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது இருக்கிற விதிமுறைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஓராண்டுக்கு முன்னாலே இருந்த அடிப்படையிலேதான் இப்போதும் தரப்படுகிறது. மேலும் பரிசீலனை செய்து பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்போது பாக்வார்டு கிளாசுக்கு எவ்வளவு பணம் தரப்படுகிறது ? ஷெட்யூல்டு காஸ்ட்டுக்கு எவ்வளவு பணம் தரப்படுகிறது ? கொடுக்கக்கூடிய பணம் மிகவும் குறைவாக இருப்பதால் அது எந்த ஒரு அடிப்படைத் தேவைக்கும் போதாத நிலை இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கொடுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லையென்பதை அரசாங்கம் உணருகிறது. யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்ற விவரம் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் விளக்கம் தரலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சாதி, மத, இன அடிப்படைகளை வெறுக்கக்கூடிய சர்க்கார் இப்போது இருக்கிறது. இந்த மாதிரி சலுகை கொடுப்பது மறைமுகமாக ஜாதி அடிப்படையில் இருப்பதால் இதை ஒழித்துவிட்டு ஏழை, பணக்காரன் என்ற இரண்டே ஜாதி அடிப்படையில் எல்லா வகுப்பினருக்கும் பி.யு.சி. வரை இலவசக் கல்வி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : சர்க்காருக்கு எந்தவித சாதி மத வேறுபாடும் கிடையாது. மக்களிடையே அந்த வேறுபாடு இருக்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வை உத்தேசித்துத் தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சாதி மத பேதமற்ற மாணவர் சமுதாயம் அமைய வேண்டுமென்பதற்காகப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எம். சண்முகம் : மாணவர்களுக்கு உதவி செய்து வருவதில், நம் மாநிலத்தில் பிற்பட்ட வகுப்புகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்டு வரும் சலுகையை இனியும் நீடித்துக் கொடுத்தால் மத்திய அரசாங்கத்தின் உதவியை கொடுக்க முடியாது என்று மத்திய அரசாங்கம் ஏதாவது அறிவித்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட அறிவிப்பு எதுவும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

திரு. எம். பூபதி : அமைச்சர் அவர்கள் பிற்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள் பற்றிய கணக்கை மட்டும் கூறினார்கள். மிகவும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு எந்த அளவிற்கு உதவி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இந்தக் கேள்வி பிற்பட்ட மாணவர்களுக்கும், அரிசன மாணவர்களுக்கும் வழங்கும் உதவித் தொகை பற்றியது. மிகவும் பின்தங்கிய மாணவர்களைப் பற்றி கேள்வி கேட்கப்படவில்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் உரிய பதில் தரப்படும்.

1968 பிபாவரி 28]

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கேள்வி கேட்கும்போது இந்த அரசாங்கம் ஜாதி அடிப்படையில் இந்தப் பணத்தைக் கொடுக்கிறமாதிரி சொன்னார்கள். பி.யு.சி. வகுப்பில் மிகவும் பின்தங்கியிருப்பவர்களுக்கு வருமான அடிப்படையில் எந்த ஜாதியாக இருந்தாலும் ரூ. 2,000-க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் இலவசம் என்ற அடிப்படையில் இந்த அரசு கொடுக்கிறது என்பது உண்மைதானா ? இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

(பதில் இல்லை).

திரு. கே. விநாயகம் : இப்போது கொடுக்கப்படுகிற சலுகை, ஜாதி அடிப்படையில் அல்ல இந்த பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் என்ற ஜாபிதா இருக்கிறது. இவைகள் எல்லாம் ஜாதிகளுக்காக ஒதுக்குவது அல்ல. எட்யூக்கேஷனலி பாக்வேர்ட், கல்வித் துறையில் அவர்கள் எல்லாம் பிற்பட்டவர்கள் என்று எழுதப்பட்டு அதன் அடிப்படையில்தான் இந்த ஜாதிகளை எடுத்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கல்வி மட்டுமல்ல, பொருளாதார அடிப்படையையும் சேர்த்துத்தான் ஜாதிகளின் ஏற்றத் தாழ்வைப் பிரித்து அதற்குரிய சலுகைகள்,—கல்விக்கு இன்னின்ன சலுகைகள், பொருளாதாரத்தில் உயர வேறு பல சலுகைகள் என்று இன்று பிரித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திருமதி. கே. பி. ஜானகியம்மாள் : பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சில மாணவர்களுக்கு மதுரை மாவட்டத்தில் பி.யு.சி. படிக்கக்கூடிய காலத்தில் அவர்கள் தகுதியைப் பார்த்து உதவித் தொகை கிடைத்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் பி. எ. படிப்புக்காக வேறு ஒரு கல்லூரிக்குச் செல்லும் நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பாரம் புதிய பாரமாக இருந்த காரணத்தினால் அந்த உதவித் தொகை இந்த ஆண்டு கிடைக்கவில்லை என்று பல மாணவர்கள் மனு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு. அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அப்படிப்பட்ட மனுக்கள் வரவில்லை என்றாலும், அப்படி பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : என்னென்ன காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி தனியாகக் குறிப்பு எழுதித் தந்தால் சர்க்கார் தகுந்த பரிசீலனை செய்யும்.

திரு. டி. மார்ட்டின் : பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு மதம் மாறிய காரணத்தினால் குறிப்பாக கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ மீனவர்கள், கிறிஸ்தவ சாணார்கள் இதுபோன்ற வர்க்கத்திற்கு கொடுக்கப்படக்கூடிய கல்விச் சலுகை அதாவது ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் போன்றவை கொடுக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையானால் அந்த பாரபட்சத்தை நீக்க தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற கல்விச் சலுகை தரப்பட்டுத்தான் வருகிறது. பொருளாதார ஏற்றத்திற்கான சலுகைகள் தரப்படவில்லையே தவிர கல்விக்கான சலுகைகள் அத்தனையும் ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் அத்தனையும் இன்று மதம் மாறியவர்களுக்கும் தரப்பட்டு வருகின்றன.

திரு. ர. வீராசாமி : ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகைக்கும் ஹாஸ்டலில் இடம் கிடைக்காமல் வெளியே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் அதைப் போக்க இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வித்தியாசம் எதுவும் இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம் : பிற்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை மிகவும் ஏழையாக இருந்தும் கூட,குறைவான மார்க்குகள் வாங்கிய சில பேர்களுக்குக் கிடைக்கிறது. கூடுதல் மார்க்குகள் வாங்கியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அந்த மாதிரி நிலை இருப் தால் எங்களைப் போன்ற பிரதிநிதிகளுக்குக்கூட அது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதை ஒரு அடிப்படையில், மார்க் அடிப்படையில், ஏழைகள் என்ற அடிப்படையில் கொடுக்க திட்டவட்டமாக அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : ஏழைகள் மிகக் குறைந்த மார்க்குகள் வாங்குகிறவர்கள் என்ற அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. சிலருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருந்தால் அதைப் பற்றி தனியான முறையில் நேரில் தெரிவித்தால் அது குறித்து நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : மாநிலத்தில் முதல் தரமாக தேறிய ஏழை ஹரிஜன பிள்ளைகளுக்கும், பின்தங்கிய வகுப்பினரின் பிள்ளைகளுக்கும் இதுவரை சலுகைப் பணம் வராத நிலை பரவலாக இருந்து வருகிறது என்ற நிலையில் எல்லா மனுக்களும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கம் எதற்காக என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ எல்லா மாணவர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. ஒரு சில மாணவர்களுக்குத் தரப்படவில்லை என்றிருப்பதுகூட இன்னும் இரண்டு மூனறுக் தினங்களில் தரப்பட முடியும். ஆனல் விண்ணப்பங்கள் செய்துள்ள எல்லா மாணவர்களுக்கும் தரப்படும் என்ற உறுதியை தருவதற்கில்லை.

திரு. எஸ். முருகையன் : ரூ. 300-க்குக் குறைவாக வருமானம் உள்ள எல்லா ஏழை மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. இந்த ஸ்காலர்ஷிப் பாரங்கள் கல்லூரிகளிலிருந்து அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதால் பல மாணவர்களுக்கு இந்த ஆண்டு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்தை ஏற்று கொண்டு அந்த மாணவர்களுக்கு மீண்டும் ஸ்காலர்ஷிப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கல்லூரிகளிலிருந்து அனுப்பப்படுவதில் காலதாமதம் அதிகம் ஏற்படுவதாக நான் கருதவில்லை. ஆனல் அந்த ஃபாரங்களை பூர்த்தி செய்வதில் மாணவர்கள் செய்கிற தவறுகள், அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக ஒதுக்கப்படுகிற நேரம் இவைகளால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே காலதாமதம் ஆகாத அளவிற்கு விரைவில் தருவதற்கான முயற்சிகள் எப்போதும் எடுத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

திருப்பூர் நகர அமைப்பு

*98 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ராமநகர் 1, 2, 3-வது வீதியில் வசிக்கும் பொது மக்கள் 23-6-1967 அன்று நகர அமைப்பு, சாலை அமைப்பது பற்றி அமைச்சருக்கு அனுப்பிய மனு வந்து சேர்ந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) சேர்ந்தது.

(இ) மனுவின் பேரில் திருப்பூர் நகராட்சி ஆணையாளரின் குறிப்புரை கேட்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : நகரமைப்பு இயக்குநர் அங்கீகாரம் பெறுமலே செல்வாக்குள்ளவர்கள் நிலங்களை தங்கள் சொந்த விருப்பப்படி விற்பதால் தான் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய சாலைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சாலைகளை மக்கள் வரிப் பணத்திலிருந்து வாங்காமல் நகரமைப்பு விதிமுறைப்படி விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நகரமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைகள் கவனிக்கப்படும்.

DR. H. V. HANDE : What are the exact details of the representation that has been made ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The residents of Ramnagar have represented that the four roads in Ramnagar have been planned to connect the Perumanallur Road and Avanashi Road that the first three streets have been blocked by 'thatties' resulting in stagnation of drain water which will cause spreading of several diseases. They have stated that they have to go to Avanashi Road and Railway station to reach Perumanallur Road and that the Commissioner hesitates to take action against the person concerned as he is related to the Chairman of the Municipal Council.

திரு. சு. துரைசாமி : அந்த இடத்துச் சொந்தக்காரர் நகர மன்ற அங்கத்தினராகவும், நகரத்தில் செல்வாக்குள்ளவராகவும், முன்னால், இங்கிருந்த அரசாங்கத்தில் இருந்த ஒரு அமைச்சரின் உறவினராகவும் இருந்த காரணத்தினால்தான் இந்த நடைமுறைகள் எல்லாம் மீறப்பட்டு அவர்கள் தங்கள் சொந்த விருப்பப்படி சாலைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். இது நீண்ட காலமாக இருக்கிறது. ஆகவே அந்தச் சாலைகளை, அடைக்கப்பட்ட இடங்களை விரைவில் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அங்கத்தினர் அவர்கள் சொல்வது போன்று ஒரு புகார் இருந்து வருகிறது. அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்துச் சீரமைப்பு

*** 99 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து சீரமைப்புச் சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(இ) திரு. முருகேச முதலியார் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளில் எவைகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) and (இ) திரு. முருகேச முதலியார் தமது அறிக்கையில் செய்துள்ள பல பரிவுரைகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இவை குறித்து முடிவு எடுக்கப்படும். இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பலருக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. குறிப்பாக சமூகப் பணியாளர்களாக வேலை செய்யும் அரசியல் தியாகிகளுக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. இதனைப் போக்க ஊராட்சி ஒன்றியங்களில் வேலை பார்ப்பவர்கள் மு.ப. 11-30

எந்தத் துறையினராக இருந்தாலும் அவர்களுக்கு வேலையிழப்பு ஏற் படாது என்ற உறுதியை அரசு அளிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே இந்த மாமன்றத் தில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சஞ்சலங்கள் ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. புதிய கேள்விகள் மூல மாக அப்படிப்பட்ட சஞ்சலங்களை உருவாக்க வேண்டாமென்று கனம் உறுப்பினரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, முந்தைய அரசு தன் னுடைய கட்சிக்கு வேண்டியவர்களை "சோஷியல் ஒர்க்கர்"களாக நியமித் திருக்கிறார்கள். அதனால் எந்தவித நன்மையும் இல்லை. பொது மக்கள் பணம் தான் வீணாகிறது. எனவே அந்த உத்தியோகத்தை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லாவற்றையும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் ஆராய்ந்து முடிவெடுக் கும்.

டாக்டர். எச். வி. ஹாண்டே : சார், அமைச்சரவர்கள் எல்லாக் கருத் துக்களும் ஆராய்ச்சியில் இருக்கின்றன என்று சொன்னார்கள். திரு. முரு கேச முதலியார் ரிப்போர்ட்டிலுள்ள ரெக்கமெண்டேஷன்களில் முக்கிய மான 3, 4 அம்சங்களைப்பற்றி இந்த மன்றத்தில் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திரு. முருகேச முதலியார் அறிக்கை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இரகசியக் குறிப்பு ஒன்றுமில்லை. சுதந்திராக் கட்சிக்கும் அந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம் என்று கனம் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, ஊராட்சித் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந் தெடுக்கும் முக்கியமான காரியத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டியவற்றில் இதுவும் ஒன்று.

THIRU K. VINAYAKAM : Sir, whereas this Report has been circulated only among the leaders of Parties inside the House and whereasMembers are at a loss to know what exactly are the recommendations contained in that Report, will the Government take this House into their confidence and distribute copies of the Report to the individual Members and also will the Government assure us that if any legislation has to be brought forward, it would be brought forward atleast before the next elections to the Local Bodies ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கட்சியின் தலைவர்களுக்குக் கொடுப்பதே மற்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் கூறி அதைப் பற்றி ஆராய்ந்து தங்கள் கட்சிகளைக் கூட்டி இந்தப் பரிவுரைகளின்மீது தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்சியின் தலைவர் உறுப்பினர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற விஷயம் இப்பொழுதுதான் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. எல்லோருக்கும் கொடுப்பது பற்றி யோசித்துத் தேவையானால் அளிக்கப் படும்.

1968 பிப்ரவரி 28]

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் பஞ்சாயத்துப் பெருமன்றத்தைச் சீரமைக்கும் நேரத்தில், இவற்றில் அனுவசியமான உள்ள வேலைகளை ஒழிப்பதற்கோ, நீக்குவதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா ? அவ்வாறு எடுப்பதால் அந்த வேலைகளில் இருப்பவர்கள் தாஙகள் எந்த விதத்தில் பாதிக்கப்படுவோமோ என்று ஐயுறுகிறார்கள். எனவே அவர்களுக்கு மாற்று வேலை தரும் அடிப்படையில் அந்த மாற்றத்தை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அனுவசிய வேலை எது என்பது முடிவாகவில்லை. அப்படி முடிவாகி நடவடிக்கை எடுக்கும் சமயத்தில் வேலை இழப்பவர்களுக்குச் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்ய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் : சார், காலதாமதம் ஏற்படுவதால் பல தப்பபிப்பிராயங்கள் உலாவுகின்றன. ஆகையால் ஒரு காலவரம்பை நிர்ணயம் செய்து அரசாங்கம் முடிவெடுக்க முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டிருக்கிறது அகில இந்திய ரீதியில், சமுதாய வளர்ச்சி அமைச்சரையும், மாநிலங்களின் முதலமைச்சர்களையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டி டிசம்பர் 29, 30-தேதிகளில் கருத்துக்களை விவாதிக்க மைய அரசு ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது. மைய அரசு எதிர்பாராமல் அந்த மாநாட்டைத் தள்ளி வைத்து விட்டது. மீண்டும் கூட்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி இல்லையென்றால் மாநில அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், இதுபற்றி மத்திய அரசின் யோசனையையும் கேட்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது மாநில அரசாங்கத்தைப் பற்றியுள்ள ஒரு நிர்வாகப் பொறுப்பு. ஒவ்வொரு மாநிலத்திலும் பஞ்சாயத்து யூனியன்களின் அமைப்புகள் வேறு வேறு விதமாக இருக்கிறது திரு. முருகேச முதலியார் அவர்களின் அறிக்கையும் கேட்டு பரிசிலனையும் நடந்தாகிவிட்டது. மாதக் கணக்கில் தாண்டிக்கொண்டிருக்கிறது. இதனால் என்ன ஆகுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் இருக்கிறேன். அதிகாரிகளிடத்திலும் இந்த அச்சம் இருக்கிறது. இதைப் போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது மத்திய அரசோடு தொடர்புடையது என்று சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டிய வளர்ச்சி நிதிகளைப் பற்றி முடிவு செய்ய அந்த மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அலுவலர்களிடையே எந்தவித பய உணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் பல்வேறு இடங்களுக்குச் சென்றபோது அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுவதைப் பார்த்தேன். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அந்த அச்சம் எற்பட வேண்டியதில்லை. அரசாங்கம் பரிசிலித்து தேவையான நேரத்தில் தேவையான முடிவுகளை நிச்சயம் எடுக்கும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க வசூல் வேலைகளையே பெரும்பாலும் கவனித்து வருகிறார்கள். கோட்டாட்சித் தலைவர் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டிய அந்தப் பொறுப்பை ஊராட்சித் தலைவரோ அல்லது ஆணையாளரோ செய்து விவசாயிகளிடம் கண்டிப்பாக இருந்து கடன்கள் போன்றவற்றை அவர்கள் வாங்கும் பொழுது பிடித்துக்கொள்கிறார்கள். அந்த ஆணையாளர்களுக்கு இது போன்ற காரியங்களைக் கொடுக்காமல் இருக்க அரசு முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கம் கடன் வசூலிப்பது சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், காரியங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்து வதற்கும் சேர்த்துத் தான். ஆகவே எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்ற முறையில் அவர்கள் பங்கை அவர்கள் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கோவையில் தேசியக் கொடி எரிக்கப்பட்டதைக் குறித்தும், திரு. சுரேந்திரன் அவர்கள் லாரி கவிழ்ந்து இரண்டு பேர் உயிர் இழந்ததைக் குறித்தும், டாக்டர் ஹாண்டே அவர்கள், அண்ணாமலைப் பல் கலைக்கழக நிகழ்ச்சிகளைக் குறித்தும் இங்கே மூன்று ஒற்றி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்காக என்று ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் கொடுத் திருக்கும் நாள். ஆகவே இன்று வேறு எந்த நிகழ்ச்சியும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று விதிமுறை இருப்பதைக் கருதி நான் இந்தத் தீர்மானங்களுக்கு முடிவு அளிக்க இயலாத நிலையில், அவற்றை நாளைய தினம் எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். ஏற்கனவே, முன்பு இங்கிருந்த பேரவைத் தலைவர்கள்

" Motion that the meeting be adjourned cannot be moved during the " Budget session " as the days have been specifically allotted by his Excellency the Governor for the Budget "

என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவற்றை நாளை எடுத்துக்கொள் கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1968 பிப்ரவரி 28

3. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம்—பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை [a] இப்பேரவையின்கண் வைத்திட வேண்டி நான் முன்வந்துள்ளேன். 1966–67-ம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளும், [a] 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் [a] இதனுடன் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்குபற்றிய நமது எண்ணங்களிலே ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும் செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலை மாறிவிட்டது. குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது. இவ்வரசின் ஓராண்டு நிறைவோடு, இவ்வரவு-செலவுத் திட்டமும் இணைந்து அமைகிறதாதலின், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளும், வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும், மக்கள் முன் சிறப்புற வைத்த கொள்கைகளை அரசு நிறைவேற்றுவதில் எவ்வாறு பயன்படும் வண்ணம் அமைந்துள்ளனவென்பதை இத் தருணத்தில் சற்று விரிவாக நான் விளக்க வேண்டுமென இப்பேரவை எதிர்பார்ப்பது சாலப் பொருத்தமாகும்.

பொருளாதாரப் பின்னணி.

2. அவ்வாறு செய்யும்போது, இந்த அரசு பதவி ஏற்குங்காலையில், நாட்டிலே நிலவிய பொருளாதார நிலையைப் பற்றி, இம்மாமன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர வேண்டியிருப்பதை இம்மன்றம் பொறுத்தருளுமென நம்புகின்றேன். அவ்வமயம் மூன்றும் திட்டம் முழுமையாக நிறைவு பெற்று, நான்காம் திட்டம் முடிவு செய்யப்படுமா என்கிற ஐயப்பாடு தெளியாமலே ஆண்டு ஒன்றும் கடந்து நின்றது. நிதியளவில் பார்க்கும்போது, மூன்றும் திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு மேலாகவே நிறைவேற்றப்பட்டிருந்தது. முதற்கண் 7,500 கோடி ரூபாய் மட்டுமே வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்திற்கு மாறாக 8,630 கோடி ரூபாயளவில் செலவினம் உயர்ந்திருந்தது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கூடுதல் வரியினங்களை ஏற்றதன் மூலம், தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தியாகத்தையும் நாட்டு மக்கள் செய்து முடித்தார்கள். அத்திட்டத்தில் திரட்டக்கருதியிருந்த 1,710 கோடி ரூபாய் கூடுதல் வரிகளுக்கு மாறாக, மத்திய, மாநில அரசுகள் கூடுதல் வரிகளின் வாயிலாக 2,880 கோடி ரூபாயளவிற்கு நிதி வசதிகளைத் திரட்டின. முதற்கண் மதிப்பிடப்பட்ட 1,100 கோடி ரூபாய் அளவிற்கு மாறாக, மத்திய அரசு மட்டும் விதித்துச் செயல்படுத்திய வரிகளின் மூலம் 2,270 கோடி ரூபாயளவிற்கு மக்கள் மீது கூடுதலாகச் சுமை ஏற்றப்பட்டது. செழுங்குடி மக்கள் மீது விழும் வருமான வரி, நிறுவன வரி (Corporation Tax) சொத்து வரி போன்ற நேர்முக வரிகள் மூலம் 320 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு திரட்டியது. எஞ்சிய தொகை, பாமர மனிதனின் அன்றாட வாழ்க்கைச் செலவின் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்த வல்லதும், உற்பத்திச் செலவுகளை பெருமளவிற்குக் கூட்டும் வகையிலுமுள்ள ஆயத் தீர்வை, சுங்க வரிகள், இரயில் கட்டணங்களில் செய்த சரிக்கட்டுதல்கள் போன்ற மறைமுக வரிகளின் வடிவில் எழுப்பப்பட்டது. நிதி அளவில் திட்டம் எதிர்பார்த்த அளவிற்குமேல் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் முக்கியமான துறைகளில் குறிக்கோள் அளவுகள் பெருமளவிற்கு எய்தப்படவில்லை. 1964–65-ம் ஆண்டு ஒன்றைத் தவிர, மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மை விளைச்சல் எந்த வகையிலும் உயரவில்லை. 1965–66-ல் 10 கோடி டன் உணவு உற்பத்தி

[a] 51-89-ம் பக்கங்களில் இணைப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.

90–49-ம் பக்கங்களில் முதலமைச்சருடைய உரையின் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைப்புகளும் அச்சிடப்பட்டுள்ளன.

செய்ய வேண்டும் என்பது குறிக்கோள் அளவு. ஆனால் 7·3 கோடிடன் உணவு தானியங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. நாட்டு வருவாய் (National Income) ஆண்டுதோறும் சராசரி 5 சதவீதம் வளர்ச்சி அடைய வேண்டுமென்கிற குறிக்கோள் அளவிற்கெதிராக 2·8 சத வீத அளவில் மட்டுமே வளர்ச்சி அடைந்து. மக்கள் தொகை நிலையாக வளர்ச்சியடைந்து வந்ததால், நபர்வாரி வருவாய், மூன்றாம் திட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி 0·3 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சி யடைந்ததாகக் கணக்கிடப்பட்டது. இவ்வாறாக, மலைப்பு எய்தும் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருந்தும், கூடுதல் வரிகளின் வடிவில் மக்கள் கணிசமான அளவிற்கு அல்லல்பட்ட போதிலும், நமது மக்களின் வாழ்க்கை நிலை எவ்வகையிலும் வளர்ச்சி பெறவில்லை. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் நிறைவேறாத போனதோடு, திட்டத்தின் பெயரால் பெருந் தொகைகள் செலவிடப்பட்டதும் ஒன்று சேர்ந்து, விலைவாசிகளின ஏற்றத்தை மேலும் உயர்த்தி பெரும்பான்மையான மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தின. மூன்றாம் திட்டக் கால அளவை முழுமையாக எடுத்துக் கொண்டால், அதற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வினைவிட மிக அதிக அளவில், 36·4 சதவீத அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்தன. இவ்விலைவாசிகளின் பொதுவான ஏற்றம் ஒருபுறமிருக்க, உணவுப்பொருள்களின் விலைவாசிகள் மட்டும் 48 சதவீதம் உயர்ந்தன. விலைவாசிகள் துறையில் 1966–67-லும் எவ்வித மேம்பாடும் காணப்படவில்லை. 1966 ஜூன் திங்களில் ரூபாயின் நாணய மாற்று வீதம் குறைக்கப்பட்டதால், நிலைமை மேலும் சீர்கேடுற்றது. அதன் காரணமாக, 1966-67-ல் விலைவாசிகளின் அளவு 16·5 சதவீதம் உயர்ந்தது. உணவு தானிய விலைகளின் செங்குத்தான ஏற்றத்தினாலும், வேளாண்மை உற்பத்தியின் வீழ்ச்சியினாலும், பாமர மக்களின் வாங்கும் திறன் கடுமையாகக் கரையமுற்பட்டது. இதன் விளைவாகத் தொழில் துறைப் பொருள்களின் தேவை பெரிதும் சரிந்து, தொழில்களில் மந்த நிலையும் வேலையின்மையும் மலிந்தன. இவ்வண்ணம் பலதொழில்களில் உற்பத்தித் திறன் ஒரு புறம், விஞ்சிய நிலையை அடைந்திருந்தும், அதே நேரத்தில், மறுபுறம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமலுள்ள முரண்பாடான நிலையொன்று உருவாயிற்று. இவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் காப்பதே திட்டமிட்ட பொருளாதாரத்தின குறிப்பிட்ட நோக்கமாக இருத்தல் வேண்டும் எனினும், இந்நிலை ஏற்பட்டது விந்தையே.

3. இதுதான், இந்த மாநில அலுவல்களை நடத்துவதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டபோது எங்களை எதிர்நோக்கியிருந்த பொருளாதார நிலையாகும். நமது மக்கள் முன் நின்ற சிக்கல்களுக்குச் செவ்விய முறையில் தீர்வு காண்பது முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை என்பதும் விரைவில் தெளிவாகியது. அரசியலமைப்பில் செய்துள்ள அதிகார வரம்பின்கீழ், நாணயச் செலாவணியை முறைப்படுத்துதல், வங்கி அலுவல்கள், அயல்நாட்டு வாணிபம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிற மத்திய அரசு மட்டுமே, நமது பொருளாதாரம் எந்த வழிகளில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று வரையறுக்கும் நிலையிலுள்ளது. மக்களின் நலனைக் கருதி இந்த அரசு அவசியமென்று கருதக்கூடிய திட்டங்களுக்கு மத்திய அரசு பொருத்தமான பொருளாதாரக் கோட்பாடுகளின் வாயிலாக ஆதரவு அளித்தாக வேண்டும். இந்தச் சூழலில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் பணி, மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகுமென்பதும் இதில் மத்திய அரசின் பங்கு மேலோங்கி நிற்பதும் வெள்ளிடை மலையாகும். எனவே, நமது மக்களை எதிர்நோக்கியுள்ள பொருளாதார இடர்ப்பாடுகளுக்குத் தற்போதைய இவ்வரவு-செலவுத் திட்டம் செவ்விய முறையில் துயர் தணிப்பு அளிக்கிறதா என்று முடிவு செய்கின்ற நேரத்தில், குறைந்த அளவே பங்குள்ள மாநில அரசு ஒல்லும் வகையில் மக்களின் நலன் கருதித் தன்னிடம் எதிர்பார்க்கப்படுகிற அனைத்தையும் ஆற்றியுள்ளதா என்பதை இம்மாமன்றம் ஆய்வு செய்தால், அது நனிமிகப் பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

1968 பிப்ரவரி 28]

பொருளாதார வளர்ச்சியில் மாநில அரசின் பங்கு.

4. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசின் பெரும் பொறுப்புகள் எவையென்பதைப்பற்றிக் குறிப்பிடுவது கடினமானதல்வென்பது எனது கருத்தாகும். பற்பல வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு, ஏற்றதும் தகவும் உள்ள தொழில் நுட்ப-நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வது மாநில அரசின் முக்கிய முதற் பொறுப்பாகும். அப்பால், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றம் ஏற்படுங்காலத்தில் முளைக்கின்ற புதிய பொறுப்புக்களையும் இடையிலே எழுகின்ற அறைகூவல்களையும் ஏற்கும் வகையில், இந்த அமைப்பைச் செவ்விய முறையில் இடைவிடாது பேணி வரவேண்டியுள்ளது. குறித்த முறைக்கிணங்க, பாசனம், மின்சாரம், வேளாண்மை விளைச்சல் போன்ற முக்கிய துறைகளில் திட்ட வேலைகளை நிறைவேற்றிச் செல்லத்தக்க நிர்வாக இயந்திரமொன்றினை நமது மாநிலத்தில் உருவாக்கியுள்ளோம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். திட்டத்தில் அடங்கிய வேலைகளை நிறைவேற்றுவதற்காக மாநில அரசு இயன்ற பெருமளவிற்கு நிதி வசதிகளை வகை செய்யும் பொருட்டு, பொதுவாகத் திட்டத்தின்பாற் படாத செலவினங்களையும், குறிப்பாக வளர்ச்சித் தலைப்பின்பால் வாராத செலவினங்களையும் வரம்புகளுக்குள் கண்டிப்பாக நிறுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் முதன்மையாக நாட்டம் செலுத்த வேண்டும். திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளை இயன்ற அளவிற்கு ஒதுக்கும் வகையில், இம் மாநிலத்தில் வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத செலவினங்களைப் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்பதையும் மெய்ப்பித்துக் காட்ட முடியும். திட்டத்திற்கு உறுதுணையாயிருக்க வேண்டுமென்கிற நமது அவாவில், வளர்ச்சிச் செலவினங்களின் கீழ்வரும் பேணுதற் செலவுகளையும் (Maintenance Expenditure) வரம்பிற்குள் நிறுத்துவதில் விழிப்புடன் இருந்துவந்துள்ளோம். தனது நிதி வசதிகளை இவ்வாறு பாதுகாத்து வருவது ஒரு புறமிருக்க, திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் நிதி வசதிகளையும் மாநில அரசு திரட்ட வேண்டுமென எதிர்ப்பார்ப்பது இயற்கையே. இத் துறையிலும் நமது மாநிலத்தின் சாதனை, எவ்விதக் கோல் கொண்டு அளப்பினும் செவ்விதாய்—பாராட்டுதற்குரியதாய் உள்ளது. நான்காம் திட்ட முதற் குறிப்பில், 1970–71-ல் முடிவடைகிற ஐந்தாண்டுக் கால அளவில், 825 கோடி ரூபாய் அளவிற்கு மாநிலங்கள் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நமது மாநிலத்தின் நான்காம் திட்ட முதலீடு 564 கோடி ரூபாயென இறுதி செய்யப்பட்டது. இது, அனைத்து மாநிலத் திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீட்டில், 8 சதவீதமாக அமைந்தது. இவ்வாறிருப்பினும், நமது மாநிலம், மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து திரட்ட வேண்டிய கூடுதல் வரி வசதிகளில் 12·5 சதவீதமாக அமைகின்ற, 105 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வசதி திரட்டுமாறு வேண்டப்பட்டது. கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவது குறித்து நமக்கு விதிக்கப்பட்ட குறிக்கோள் அளவு, நாம் இத் துறையில் ஏற்கெனவே எடுத்துள்ள முயற்சியுடனும், நமது திட்ட அளவுடனும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மிக அதிகமென்றே தோன்றுகிறது. ஆயினும் நமது மாநில முன்னேற்றத்திற்கு மிகத் தேவையெனக் கருதப்படுகிற குறைந்த அளவுத் திட்டம், நிதி வசதிக் குறைவினால் தடைப்பட்டு நின்றுவிடக் கூடாதே என்கிற கவலையினால் இக் குறிக்கோள் அளவினை முந்தைய அரசு ஏற்றுக்கொண்டது. திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதிகள் அனைத்தையும் திரட்டுவதாக மாநிலங்கள் உற்சாகத்துடன் வாக்களித்துவிட்டு, தங்கள் வாக்குறுதியைப் பின்னர் நிறைவேற்ற முயல்வதேயில்லையென்று பொதுவாகக் குறை கூறப்படுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். நான்காம் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பது தள்ளிப் போடப்பட்டிருப்பினும், ஆண்டுத் திட்டங்களில் செய்துள்ள முதலீடுகள், திட்ட ஆணைக் குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடுகளைக் காட்டிலும் கணிசமான அளவிற்குக் குறைவாக இருப்பினும், இம் மாநிலம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரட்டும் குறிக்கோள் அளவுகளைப் பெருமளவிற்கு நிறைவேற்றியுள்ளதென்பதை வலியுறுத்திச்சொல்ல

விரும்புகின்றேன். 1965 நவம்பர் திங்களில், முன்னைய அரசினால் விதிக்கப்பட்ட பற்பல வாரியினங்களின்மூலம், சுமார் 50 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டச் செயற் குறிப்புகளின் பகுதியாக, கடந்த ஜூன் திங்களில் இப் பேரவை ஏற்றுக்கொண்ட வரியினங்களின் வாயிலாக, 1970–71-ல் முடிவடையும் கால அளவில், 32 கோடி ரூபாய் மேலும் வருவாய் கிட்டும். எனவே, திட்ட ஆணைக் குழு விதித்துள்ளபடி கூடுதல் வரி விதிப்பின் மூலம் திரட்ட வேண்டிய 105 கோடி ரூபாய் குறிக்கோள் அளவில், நாம் ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் 82 கோடி ரூபாய் கிட்டும். அதாவது, இம் மாநிலம் தனது குறிக்கோள் அளவில் 80 சத வீத அளவினை நிறைவேற்றியுள்ளது. எனக்குக் கிடைத்துள்ள தகவல் படி, நான்காம் திட்டத்திற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதைப் பொறுத்த வரையில், வேறு எந்த மாநிலமும், நமது மாநிலத்தைப் போன்று இந்த அளவிற்குச் சிறப்புறச் செயல்படவில்லையெனத் தெரிகிறது.

5. மாநில அரசு, தனது சொந்த நிதி வசதிகளையும் மத்திய அரசு வகை செய்கிற நிதி வசதிகளையும் பயன் படுத்துங்காலையில், திட்டம் குறித்த பொருத்தமான முறைவைப்புகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் பொருளாதார நிலையைப் பெருமளவில் உரமூட்டுவதற்கு உதவியாய் அமையாத, நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ—ஆதாயம் தாராத புறக்கோலத் திட்டங்கள் ல் நிதி வசதிகளைக் குறிப்பாக விரயம் செய்யக் கூடாது என்றும் எதிர்ப்பார்ப்பது நியாயமெனதேயாகும். இந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் விரயமாகிற திட்டங்களை நாம் தவிர்த்திருப்பதோடு, நம்முடைய திறமைக்குள் செவ்விய முறையில் நிறைவேற்றி, நிர்வகிக்கக்கூடிய திட்டங்களில் மட்டுமே நாம் நாட்டம் செலுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டங்களே, பொதுவாக நமது மாநிலப்பொருளாதாரத்தை வளமாக்கும் சிறந்த திட்டங்களாகும். பெரியதொரு திட்டத்தை நிறைவேற்றுவதால் மக்களின் வாங்கும் திறன் பெருமளவில் விஞ்சும். எனவே, இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளை உரிய வரம்புகளுக்குள் நிறுத்தும் பொருட்டு, அவற்றை முறைப்படுத்தி வழங்குவதற்கான செவ்விய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். இந்தத் துறையிலும், கடந்த ஆண்டில் மாநில அரசு தனது பொறுப்புக்களைச் சீரிய முறையில் நிறைவேற்றியுள்ளது என்பதை அழுத்தமுடன் கூற விழைகிறேன். உணவுதானியக் கொள்முதல் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தியதன் வாயிலாக, தானியங்கள் இடையீடின்றி வழங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடிந்தது. நாட்டின் வேறெந்தப் பகுதியையும்விட, உணவு தானியங்களின் வெளி அங்காடி விலை நமது மாநிலத்தில் நியாயமான அளவில் நிலைபெற்றுள்ளது

மத்திய உதவியின் பங்கு

6. இங்ஙனமெல்லாம் செயலாற்றி வந்திருப்பினும், நமது மாநிலத்தில் வளர்ச்சி வேகம் தணியாது உயர்ந்த வண்ணமே இருக்கச் செய்ய இயலாமைக்கும், மக்களின் பலதிறப்பட்ட தேவைகளை முழு அளவில் நிறைவேற்ற ஏலாமைக்கும் காரணம் என்னவென்று இப்பேரவையினரும், மக்களனைவரும் அறிய விழைவது இயல்பேயாகும். மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையை நிதி வசதிகளைப் பகிர்ந்தளிப்பதிலுள்ள அகன்ற வேறுபாடு ஒருபுறம் இருக்க, மத்திய அரசு, வளர்ச்சித் தலைப் பின்பாற்படாத தனது செலவினத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்தத் தவறியமையே, குறிப்பாகக் கடந்த மூன்றாண்டுகளில் திட்ட முன்னேற்றம் தடைப்பட்டதற்குப் பெரிதும் காரணமாகும். அரசியலமைப்பின்படி, வளரும் வருவாய் வாய்ப்புகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்குமாறாக, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற செலவினம் விரிந்து செல்லு இயல்புடைய பரந்த பொறுப்புக்கள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கென நிலையாக உயர்ந்து வந்துள்ள மத்திய உதவியின் வாயிலாக, இதுகாறும் இந்த ஏற்றத்தாழ்வு ஓரளவிற்காவது சரிக்கட்டப்பட்டு வந்தது. ஆனால், 1966 நவம்பர் திங்களில், இம் மாநிலத்தின் நான்காம் திட்டம் தாற்காலிகமாக முடிவு செய்யப்பட்ட

1968 பிப்ரவரி 28]

போது, இத் திட்டத்தின் 564 கோடி ரூபாய் முதலீட்டில், 250 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மத்திய உதவி கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. மொத்த முதலீட்டில் 44 சத வீத அளவில் நிற்கிற இந்த மத்திய உதவி, இதற்கு முந்தைய திட்டக் கால அளவுகளில் அளிக்கப்பட்டு வந்த மத்திய உதவியைக் காட்டிலும் அதிக அளவில் குறைந்திருந்தது. நான்காம் திட்டத்திற்குரிய மொத்த மத்திய உதவியை எடுத்துக்கொண்டாலும், இந்த மாநிலத்திற்கு வழங்குவதற்காக ஒப்புக்கொண்ட தொகை குறைவு தான். இம் மாநில மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில், நமக்கு 7·8 சத வீதத்திற்காவது மத்திய உதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனல் மாருக, ஒப்புக்கொள்ளப்பட்ட உதவி, மொத்த மத்திய உதவியில் 7 சத வீதமாகவே இருந்தது.

7. போதிய அளவில் இராத இந்த உதவியும், 1966-67-லும் 1967-68-லும் ஒத்த விகிதப்படி வழங்கப்படவில்லை. திட்ட ஆணைக் குழு நமது அழுத்தமான வேண்டுகோளுக்கிணங்கி, ஒப்புக்கொண்ட விகிதப்படி மத்திய உதவியை வரும் ஆண்டிற்கு நமக்கு ஒதுக்கித் தரவேண்டியதன் தேவையை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனல், கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட உதவித் தொகைக் குறைவினைப் பொறுத்த மட்டில், ஆணைக் குழு அதில் மூன்றில் ஒரு பங்கினை மட்டுமே ஈடுசெய்ய ஒப்புக்கொண்டுள்ளது. ஆனல், கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட குறைவினையும், அடுத்த ஆண்டில் நமக்குள்ள கடும் இடர்ப்பாடுகளையும் கருத்திற்கொண்டு, ஆணைக் குழு நியாயமாக முற்றிலும் ஈடு செய்திருக்க வேண்டும். சென்ற ஈராண்டு களில் மாநிலங்களுக்குச் சேரவேண்டிய விகிதப் படியான உதவியைப் பெருத ஒரு சில மாநிலங்களுள், நான்காம் நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பினையொட்டி, திட்டத்திற்குப் புறம்பான கணக்கில் உபரி எதுவும், பெற்றிராத மாநிலம், நமது மாநிலம் ஒன்றுதான். இதைக் கருதியாவது திட்ட ஆணைக் குழு நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்திருக்க வேண்டும்.

8. மத்திய உதவியை வழங்குவதில் இவ்வாறு ஏற்படும் தேக்கம் ஒருபுறமிருக்க, மாநிலத் திட்டங்கள் அனைத்திற்கும் சேர்ந்து வழங்கப்படும் மத்திய உதவி வளராது நின்றதோடு, ஓரளவிற்குக் குறைந்தும் விட்டது. மாநிலத் திட்டங்களுக்கு 1966-67-ல் வழங்கிய மொத்த மத்திய உதவி, 617 கோடி ரூபாய் அளவில் நின்றது. இது இயல்பாக, 1967-68-ல் 650 கோடி ரூபாய்க்கும், 1968-69-ல் 700 கோடி ரூபாய்க்குமாவது உயர்ந் திருக்க வேண்டும். இவ்வாறு உயர்த்தப்பட்டு, உடன்பாடான விகிதப்படி உதவித் தொகை வழங்கப்பட்டிருக்குமானல், நடப்பாண்டிலோ, அடுத்த ஆண்டிலோ, நமக்கு ஏற்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த விதமான இடர்ப்பாடுகளும் ஏற்பட்டிருக்காது. ஆனல், 1967-68-ல் வழங் கிய மத்திய உதவியின் அளவு, 617 கோடி ரூபாயிலிருந்து 590 கோடி ரூபாயாகப் பெரிதும் வெட்டப்பட்டது. வேளாண்மை உற்பத்தியில் நடப் பாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், அதன் விளைவாகத்தொழில் உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சியையும் உள்ளத்திற்கொண்டு, வருகிற ஆண்டில் மத்திய நிதி வசதி பெருகுமென்று நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆனல், மீண்டும் மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி நடப்பாண்டு அளவான 590 கோடி ரூபாய் அளவில் நிறுத்தப்பட்டுள்ளது. மத்திய உதவியின் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற இந்த இடை ஒய்வு ஒருபுறமிருக்க, மாநிலங்கள் பங்குகொள்ளும் மத்திய வரிகள், எழுச்சி அடைய வேண்டிய அளவு எழுச்சி பெறவில்லை. வருமான வரி, ஆயத்தீர்வை போன்ற மத்திய வரிகள், பொருளாதார மந்தநிலை காரணமாகவும் ஏனைய காரணங்களி னலும் வளர்ச்சி அடையவில்லையென்று சொல்லித் தப்பினலும், மாநிலங் கள் கடும் நிதி இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி இருக்கின்ற இந்த நேரத்தில் அவைகளுக்குத் துயர்தணிப்பு அளிப்பதற்காக, இப்போது 550 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையாக நிற்கிறதென மதிப்பிடப்பட்டுள்ள, வரு மான வரி நிலுவைகளை வசூலிப்பதற்கு ஓரளவிற்காவது அக்கறையுடன் முயற்சிகள் செய்யப்படுமென்று நாம் எதிர்பார்க்க வேண்டும். வருமான வரியின்கீழ் கிடைக்கும் தொகையில் 75 சத வீதம் மாநிலங்களுக்கு இடையே

பிரித்துக் கொடுக்கப்படவிருப்பதால், இது பெரும்பாலும் மாநில வருவாய் வாயில்களில் ஒன்றாகவே மாறியுள்ளது. இந்த வரியை விதித்துத் திரட்டும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது என்றாலும், முனைந்து வசூல் செய்வதில் மத்திய அரசின் இயந்திரத்தில் குறை ஏதும் ஏற்படின், மாநிலங்களே பெரிதும் அல்லற்படுகின்றன. வரி நிலுவைகளை வசூலிப்பதில் மாநில அரசுகள் செவ்வையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று திட்ட ஆணைக் குழு வற்புறுத்தி வருகின்ற அதே நேரத்தில், தற்போது வருமான வரியைப் பொறுத்தவரையிலுள்ள ஏராளமான நிலுவைத் தொகைகளை வசூல் செய்வதற்கு மத்திய அரசின் மீதும், அதே அளவு வன்மையாக அது வற்புறுத்த வேண்டும். விற்பனை வரியிலிருந்து, 1966–67-ல் 44 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் கிட்டியிருக்க நமது மாநிலத்தில் நிலுவையில் நின்ற தொகையின் மொத்தம் 7 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். இது, இதற்கான ஆண்டு வருவாயில் 16 சத வீதமே. வருமான வரியின்கீழ் வசூலிக்கப்படாத நிலுவைத் தொகைகளும், ஏறக்குறைய இந்த அளவில் நிறுத்தப்பட்டிருக்குமானால், மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வசதிகள் கிட்டும் நிலைமையில், கணிசமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

வளரும் கடன் சுமை

9. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவியில் தேக்க நிலை ஏற்பட்டு, மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு வளர்ச்சி அடையாதுபோன அதே நேரத்தில், இந்திய அரசிற்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு மிக அதிகமாய் உயர்ந்துள்ளது. எனது, கடந்த ஜூன் திங்கள் வரவு-செலவுத் திட்ட உரையில், கடன் பொறுப்புக்கள் ஏறியவாறே செல்வதை இப்பேரவையின் நாட்டத்திற்குக் கொண்டுவரும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். முதல் திட்டத்தின் தொடக்கத்திலே, 1950-ல் இந்திய அரசிற்குச் சேரவேண்டிய கடன் 14 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாறாக, மூன்றாம் திட்ட இறுதியில் 270 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருந்தது. அது, இப்போது 300 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களுக்கு உரிய சராசரி வட்டி வீதம், 1955–56-ல் ஏறக்குறைய இரண்டரை சத வீதமாக இருந்ததற்கு மாறாக, இப்போது நாலரை சத வீதத்திற்கு மேல் போகிறது. இவையிரண்டின் விளைவாக, இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை, 1950–51-ல் ஏறக்குறைய 41 லட்சம் ரூபாயாக இருந்தது. 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்திய அரசுக்குச்செலுத்த வேண்டிய வட்டித்தொகைகளின் சுமையினால் பல மாநிலங்கள் தடுமாறி நிற்கின்றன. எனவே, மாநில அளவில் செய்யப்படுகின்ற மூலதன முதலீட்டின் கணிசமான பகுதியின் ஆதாயமற்ற தன்மையை இந்திய அரசு கவனித்து, வட்டி வீதம் குறித்தும், கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவினைக் குறித்தும் தற்போதுள்ள கடும் நிபந்தனைகளைத் தளர்த்தியமைத்து, ஆறுதல் அளிக்க வேண்டுமென, மாநில அரசுகள், இந்திய அரசுடனும், தொடர்ந்துவந்த நிதி ஆணைக் குழுக்களுடனும் வாதிட்டு வந்துள்ளன. பற்பல மாநிலங்களிலிருந்து தனக்குச் சேர வேண்டிய கடனைத் தொகுப்பதற்கான சில செயற் குறிப்புகளை இந்திய அரசு இப்போது அனுப்பியுள்ளது. ஆனால், அது தயாரித்து அனுப்பியுள்ள செயற்குறிப்புகள், பெரும் பலன் அளிக்க மாட்டா. குறிப்பாக, அவை, கடனில் கணிசமான பகுதி, நீர் வழங்குதல், புயல் அல்லது பஞ்சம் காரணமாக ஏற்பட்ட துயர் துடைத்தல் அல்லது பொற்கொல்லர்கள் துயர் துடைத்தல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளன, என்பதையும், அத்தகைய கடன்கள், நியாயமாக மானியங்களாக மாற்றப்பட வேண்டியவை என்பதையும் நாட்டத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டுள்ளன.

10. வட்டிச் செலவுகள் ஒரு புறமிருக்க, 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகை

1968 பிப்ரவரி 28]

கள் மிகவும் அதிகரித்துள்ளன. நடப்பு ஆண்டில் 20 கோடியே 30 இலட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதற்கு மாறாக, நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை, குறுகிய காலக்கடன்களை நீக்கிப் பார்த்தாலும், 7 கோடி ரூபாய் கூடுதலாகி, மொத்தம் 27 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது. அடுத்த ஆண்டில், திட்டத்திற்கான நமது நிதி வசதிகள் கரைவதற்குக் காரணமான முக்கியக் கூறுகளில், இது ஒன்றாகும். நிதி ஆண்டினை முழுமையாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, ரிசர்வ் வங்கியிட மிருந்து அதிகப்பற்று (Over draft) இன்றி, நாம் இதுகாறும் நமது நிதி நிலையைச்சமாளித்து வந்திருக்கிறோம் என்பதை அறிய, இப்பேரவை மகிழ்ச்சி யுறுமென்று நம்புகிறேன். 1966-67-ல் மத்திய அரசு, ஒரு சில மாநிலங்களின் அதிகப்பற்றைத் தீர்ப்பதற்கென அவைகட்கு 108 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்புதவி அளித்தது. அத்தகைய உதவியெதனை யும் நாட வேண்டிய நிலை ஏற்படாத மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. நடப்பு ஆண்டில் கூட, பல மாநில அரசுகள் அதிகப்பற்று வாங்கும் நிலையை அடையலாமென்றும், மத்திய அரசு, அத்தகைய மாநில அரசுகளின் உதவிக்குச் செல்லக்கூடுமென்றும் நான் நினைக்கிறேன். மாநிலங்களது அதிகப் பற்றுகளைக் கொடுத்துத் தீர்க்க, மத்திய அரசு, திட்டத்திற்குப் புறம்பாகச் சிறப்பு உதவி அளிக்க வேண்டிய நிலை ஏற்படாதிருப்பின், மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி மேலும் உயர்ந்திருக்குமென்றும், நாமும் நமக்குரிய பங்கினை அடைந்திருப்போ மென்றும் ஈண்டு எடுத்துக்காட்டுவது மிகையாகாது. மாநில அரசுகளின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, இந்திய அரசு தொடங்க வேண்டுமென்றும், குறிப்பாக மாநில அரசுகள் முறையின்றி அதிகப் பற்று பெறும் நிலை அறவே நிறுத்தப்பட வேண்டுமென்றும் எல்லோராலும் உணரப்படுகிறது. எனவே, நிதி நெருக்கடி எதனிலும் சிக்காமல் இதுகாறும் இயங்கி வந்துள்ள ஒரு மாநிலம்—திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளைத் திரட்டுவதில் பின்னடையாத ஒரு மாநிலம்— தனது திட்டங்களின் வளர்ச்சி ஓட்டம் தளராமல் பேணி வருவதற்கென, அதற்கு இத்தருணத்தில் உதவிபுரிய வேண்டுவது கடமையாகும். அவ் வாறு உதவி அளிக்க மறுப்பது கடந்த காலத்தில் நாம் விவேகத்துடன் செயலாற்றியமைக்காக நம்மைத் தண்டிப்பதற்கொப்பாகும். எனவே, அடுத்த ஆண்டில் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, ஏறக் குறைய நடப்பு ஆண்டில் இருக்கும் அளவிலேயே நிற்கும் வண்ணம், அடுத்த நிதியாண்டில் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துகின்ற கால அளவினை மாற்றியமைக்கும்படி இந்திய அரசினை கேட்டுள்ளோம். தொடக்கத்தில் மத்திய அரசு அளித்துள்ள பதில் சாதகமாக இல்லாதிருப்பினும், நமது பக்கம் நியாயம் இருப்பதால், இதனைத் தொடர்ந்து வற்புறுத்தவேண்டுமென மாநில அரசு விரும்பு கிறது.

11. இந்திய அரசிற்குப் பெருந்தொகைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதோடு, கடந்த காலத்தில் எழுப்பியுள்ள பெரிய பொதுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பும் கூடியுள்ளது. 12 00
நடப்பு ஆண்டில் 18 கோடி ரூபாய்க்கு வெளிச்சந்தைக் கடன் ஒன்றைத் திரட்டியுள்ளோம். தவணைக்காலம் முடிவடைந்த ஒரு கடனுக்கு 10·5 கோடி ரூபாய் அளவில் திருப்பிச் செலுத்தப்பட்ட பின்னர், இக் கடன் வாயிலாக நிகரமாய்க் கிட்டிய நிதி வசதி, 7·5 கோடி ரூபாய் அளவினதாகும். அடுத்த ஆண்டில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய பெரிய வெளிச் சந்தைக் கடன் ஒன்று, 14 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இருபது கோடி ரூபாய் அளவில் புதிய கடன் ஒன்றினை நாம் திரட்ட முடியு மென்ற அடிப்படையில், இக் கடன் வாயிலாக அரசின் வழிவகை நிதி நிலைக்குக் கிட்டும் நிகர உதவி, 6 கோடி ரூபாய்அளவினதேயாகும். எனவே, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ் வினத்தின் கீழ் மட்டும் திட்டத்திற்குத் தேவைப்படுகிற நிதி வசதியில் 1·5 கோடி ரூபாய் அளவில் துண்டுவிழும். கடந்த காலத்தில் கடன் கரைப்பு நிதிக்கென (Sinking Fund) போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கு மாதலால், காலத் தருவாயிலுள்ள கடன்களுக்கான தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் எந்த விதமான சிக்கல்களும் ஏற்பட வேண்டிய

